Registered as a Newspaper    பக்கங்கள் 06    விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 05    திருவள்ளுவர் ஆண்டு 2025    மாசி 14    (26.02.94)    சனிக்கிழமை    ஓசை 08

## கிட்டப்பார்வை குறைபாட்டுக்கு புதிய லேசர் சிகிச்சை

கிட்டப்பார்வையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவைச் சிகிச்சையின்றி அந்தக் குறையைப் போக்கக்கூடிய புதிய தொழில்நுட்பம் ஒன்று சென்னையில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. விழியின் வெண்படலத்தில் ஏற்படும் வளைவுதான் கிட்டப்பார்வைக்குக் காரணமாகும். இதன் காரணமாக தொலைதூரத்திலுள்ள பொருள்களைப் பார்ப்பதில் சிரமம் ஏற்படும். 'எக்னிமர் லேசர்' சிகிச்சை மூலம் 1 முதல் 16 வரையுள்ள குறைகளைப் போக்கமுடியும். சென்னையில் நேற்று பல நோயாளிகளுக்கு இச் சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இந்த லேசர் சிகிச்சை வெண்படலத்தைச் சமப்படுத்துகிறது. இதன் மூலம் பார்வைக் (6ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்கு மாகாண உள்ளூராட்சி தேர்தல்

# பாதுகாப்பு ஏற்பாடுகளில் திடீர் மாற்றம்;

# புலிகள் தாக்கலாம் என படையினர் அச்சம்!

## மேலதிக படைகள் தயார் நிலையில்

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு சிறிலங்கா படையினரால் வகுக்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளில் திடீர்மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும், புலிகள் தாக்கலாம் என்ற அச்சம் காரணமாக மேலதிக துருப்புக்களை கிழக்கிற்கு அனுப்பிவைக்க கொழும்பில் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள தேர்தல்களைத் தடுப்பதற்கு விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்தும் முன்னர் வகுக்கப்பட்ட திட்டத்தை விடுதலைப் புலிகள் நன்கு புரிந்துகொண்டு அதற்கு எதிராக நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் என சிறிலங்கா இரகசிய பொலிசாரும் தேசிய இரகசிய புலனாய்வு பகுதியினரும் கருதுவதைத் தொடர்ந்தும்புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ள யினர் கிழக்குமாகாணத்திலே வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும், மேலும் மேலதிக துருப்புக்களை கிழக்கு மாகாணம் நோக்கிக் கொண்டு செல்வதற்கு ஆயத்தமான நிலையில் இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக "திவயின" பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## கட்சிதாவும் காட்சிகள் தென்பகுதியில் சாதாரணம்

(கொழும்பு)

தென்மாகாணசபை தேர்தல் பிரசாரத்தில் கட்சி மாற்ற பிரசாரமே அதிகமாக காணப்படுகின்றது. எதிரணியிலிருந்து பலர் தமது கட்சியுடன் இணைந்துள்ளதாக ஐ. தே. க. பிரசாரம் செய்கின்றது. ஐ. தே. கவிலிருந்து பலர் விலகி தமது அணியான பொதுஜன ஐக்கிய முன்னணியில் சேர்ந்துள்ளதாக சுதந்திரக்கட்சி பிரசாரம் செய்கிறது. கட்சி மாறும் படலங்களே இப்போது முக்கிய இடத்தை வகிக்கின்றன.

நவசமசமாஜக் கட்சியினரும் மாற்றுக் கட்சியினர் தம் பக்கம் சாரைசாரையாக வந்து சேர்வதாக பிரசாரம் செய்கின்றனர்.

## உதவி வழங்கும் நாடுகள் ஜூனில் கூடமாட்டா

### பிரதமர் ரணில் தகவல்

(கொழும்பு)

இவ் வருடம் தேர்தல் ஆண்டாக இருப்பதால் எதிர்வரும் ஜூனில் பாரிஸில் நடைபெறவிருந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுக் சந்திப்பின் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார். ஜனாதிபதி தேர்தல் டிசம்பருக்கு முன் நடைபெறவிருப்பதால் பாராளுமன்றத்தில் பட்ஜட் சமர்ப்பிக்கப்பட

## இராணுவ அட்டகாசம் கிழக்கில் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரதும், தேச விரோதக் குழுக்களதும் அட்டூழியங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன.

கடந்த 18ஆம் திகதி களுதாவளையைச்சேர்ந்த ஒரே குடும்பத்தைச்சேர்ந்த மூன்று பேரைக் கைதுசெய்த விசேட அதிரடிப்படையினர் தமது முகாமுக்கு அழைத்துச்சென்றனர். இ. அரசரத்தினம் (வயது26), இவரது மனைவி விஜயலட்சுமி (வயது23), மற்றும் இவர்களது பிள்ளை ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக அறியமுடிகிறது.

மேலும் கடந்த 21ஆம்திகதி குறுமண்வெளியில் உள்ள அதிரடிப்படை முகாமைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் எருவிலைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை குடும்பத்தவரை தனது ஜீப் வண்டியில் ஏற்றிச்சென்று பட்டிருப்புப் பகுதியில் இறக்கி விட்டுச்சென்றுள்ளார். இவர்கள் பின்னர் பெரும் சிரமத்தின் மத்தியில் கோவில்போரதீவில் தஞ்சம் புகுந்தனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு-கற்பிட்டி கடற்படை தளம் கடல் புலிகளால் தாக்கப்படலாம்

...பிரசாரமே அதிகமாக காணப்படுகின்றது. எதிரணியிலிருந்து பலர் தமது கட்சியுடன் இணைந்துள்ளதாக ஐ. தே. க. பிரசாரம் செய்கின்றது. ஐ. தே. கவிலிருந்து பலர் விலகி தமது அணியான பொதுஜன ஐக்கிய முன்னணியில் சேர்ந்துள்ளதாக சுதந்திரக்கட்சி பிரசாரம் செய்கிறது. கட்சி மாறும் படலங்களே இப்போது முக்கிய இடத்தை வகிக்கின்றன.

நவசமசமாஜக் கட்சியினரும் மாற்றுக் கட்சியினர் தம் பக்கம் சாரைசாரையாக வந்து சேர்வதாக பிரசாரம் செய்கின்றனர்.

...பாதுகாப்பு ஏற்பாடுகளில் திடீர்மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும், புலிகள் தாக்கலாம் என்ற அச்சம் காரணமாக மேலதிக துருப்புக்களை கிழக்கிற்கு அனுப்பிவைக்க கொழும்பில் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள தேர்தல்களைத் தடுப்பதற்கு விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்தும் முன்னர் வகுக்கப்பட்ட திட்டத்தை விடுதலைப் புலிகள் நன்கு புரிந்து கொண்டு அதற்கு எதிராக நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் என சிறிலங்கா இரகசிய பொலிசாரும் தேசிய இரகசிய புலனாய்வு பகுதியினரும் கருதுவதைத் தொடர்ந்தும் புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக ''திவயின'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்காக கிழக்கு மாகாண தேர்தலுக்காக நிறுத்தப்பட்டிருந்த பல சிறிலங்கா படையினர் கிழக்கு மாகாணத்திலே வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும், மேலும் மேலதிக துருப்புக்களை கிழக்கு மாகாணம் நோக்கிக் கொண்டு செல்வதற்கு ஆயத்தமான நிலையில் இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக ''திவயின'' பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

...விரோதக் குழுக்களதும் அட்டூழியங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன.

கடந்த 18ஆம் திகதி களுதாவளையைச்சேர்ந்த ஒரே குடும்பத்தைச்சேர்ந்த மூன்று பேரைக் கைதுசெய்த விசேட அதிரடிப்படையினர் தமது முகாமுக்கு அழைத்துச் சென்றனர். இ. அரசரத்தினம் (வயது26), இவரது மனைவி விஜயலட்சுமி (வயது23), மற்றும் இவர்களது பிள்ளை

மேலும் கடந்த 21ஆம் திகதி குறுமண்வெளியில் உள்ள அதிரடிப்படை முகாமைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் எருவிலைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை குடும்பத்தவரை தனது ஜீப் வண்டியில் ஏற்றிச் சென்று பட்டிருப்புப் பகுதியில் இறக்கி விட்டுச்சென்றுள்ளார். இவர்கள் பின்னர் பெரும் சிரமத்தின் மத்தியில் கோவில்போரதீவில் தஞ்சம் புகுந்தனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# உதவி வழங்கும் நாடுகள் ஜூனில் கூடமாட்டா

### பிரதமர் ரணில் தகவல்

(கொழும்பு)

இவ் வருடம் தேர்தல் ஆண்டாக இருப்பதால் எதிர்வரும் ஜூனில் பாரிஸில் நடைபெறவிருந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுக்கூட்டமும் நடைபெறாமல் போகலாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு பத்திரிகையாளர் சங்கத்தினருடனான சந்திப்பின் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார். ஜனாதிபதி தேர்தல் டிசம்பருக்கு முன் நடைபெறவிருப்பதால் பாராளுமன்றத்தில் பட்ஜட் சமர்ப்பிக்கப்படமாட்டாது எனவும் அதற்குப் பதிலாக தற்காலிக பட்ஜட் ஒன்றே சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொழும்பு-கற்பிட்டி கடற்படை தளம் கடல் புலிகளால் தாக்கப்படலாம்

### மன்னாரில் பயிற்சி நடைபெறுகிறதாம்

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையினரிடமிருந்து கைப்பற்றிய அதிவேக 'வோட்டர் ஜெற்' படகுகளைப் பாவித்து சிறிலங்கா கடற்படையினர் மீது பாரிய தாக்குதலை நடாத்த கடற்புலிகள் தயாராகி இருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் அல்லது கடற்படைத்தளத்தின் மீது இத்தாக்குதல் நடத்தப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக கடற்படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளதாக மேலும் அவ்வட்டாரங்கள் கூறுகின்றன.

சென்றவருடம் நவம்பரில் கடற்படையினரிடம் கைப்பற்றப்பட்ட அதிவேக வோட்டர் ஜெற் படகுகள் இரண்டும், மேலும் இரண்டு அதிவேக படகுகளுடன் 50 மீனவர்களின் இயந்திரப் படகுகளும் தாக்குதல் நடாத்தப் பயன்படுத்தப்படவுள்ளன எனவும்,

இப்படகுகள் மன்னாருக்கு 12 மைல் தொலைவிலுள்ள விடத்தல் தீவுப்பகுதிக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன எனவும் இப்போது தாக்குதலுக்கானபயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினரின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் விதத்தில் கற்பிட்டி - மன்னார் கடற்பகுதியில், கடற்புலிகளின் ஊடுருவல் அதிகரித்துள்ளது எனவும் இத்தாக்குதல் திட்டத்திற்காக புலிகள் 41 இயந்திரங்களையும், 15 படகுகளையும் கற்பிட்டி மீனவர்களிடமிருந்து எடுத்துச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகள்வசமுள்ள அதிவேக வோட்டர்ஜெற் படகுகள் மன்னாரிலிருந்து கொழும்பு செல்ல 2மணி நேரமே எடுக்கும் என தெரிவித்த சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் புலிகளின் தாக்குதலுக்கு முகம்கொடுக்க தயாராக இருக்கும்படி சிறிலங்கா கடற்படையினருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# யூதக் குடியேற்றவாசி வெறியாட்டம் 50 பாலஸ்தீனர்கள் சுட்டுக்கொலை

(ஜெருசலேம்)

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட ஜோர்டானின் மேற்குக் கரையில் ஏப்ரோன் பகுதியில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் தொழுகையில் ஈடுபட்டிருந்த பாலஸ்தீனர்கள் மீது யூதக் குடியேற்றவாசி ஒருவர் நடத்திய சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் சுமார் 50 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

இச் செய்தி பரவியதையடுத்து மேற்குக்கரை மற்றும் காஸா பகுதியில் கலவரங்கள் வெடித்தன. இதன் போது இஸ்ரேலிய இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இப்படுகொலைகளினால் இஸ்ரேல் - பாலஸ்தீன சமாதானத்தை நிலைநாட்டுவது இக்கட்டான நிலைக்கு வரலாம் எனக் கருதப்படுகிறது.

இதே சமயம் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை பள்ளிவாசலில்மேற்கொண்ட இராணுவப் பாணியிலான சீருடை அணிந்திருந்த அந்த யூத நபர் பின்னர் பள்ளிவாசலில் இருந்த மற்றையவர்களினால் அடித்துக் கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. நிலைமை தொடர்ந்து பதற்றமாக இருப்பதால் இப்பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## சமாதான நடவடிக்கையில் சீர்குலைவு ஏற்படும்

### யாசீர் அரபாத் கூறுகிறார்

ஜோர்டான் மேற்கு கரையில் நடைபெற்ற படுகொலைகளினால் முழு மத்திய கிழக்கு சமாதான நடவடிக்கைகளும் சீர்குலையும் என பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசீர் அரபாத் தெரிவித்துள்ளார். இக்கொலைகளுக்கு இஸ்ரேல்பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடவேண்டாம் என அரபு மக்களை இஸ்ரேல் பிரதமர் ராபின் வேண்டியுள்ளார். சம்பவம் நடைபெற்ற ஏப்ரோன் பகுதியை மூடிவிடுமாறும் இஸ்ரேல் அமைச்சரவை உத்தரவிட்டுள்ளது.

## யுத்தக்கைதிகள் இருவரும் கொழும்புசென்றடைந்தனர்

விடுதலைப்புலிகளால் நேற்று விடுவிக்கப்பட்ட இரு யுத்தக்கைதிகளும் திருகோணமலை சென்று அங்கிருந்து கொழும்பிற்குப் போய்ச் சேர்ந்ததாக நேற்றிரவு ரூபவாகினி தெரிவித்தது.

கான்ஸ்டபிள் திலகரட்ண பண்டா, சாரதி ஏ. ஜி. எம். சந்திரசேகர ஆகியோரே கொழும்பு சென்றடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# கிழக்கில் தமிழர்களின் பலத்தை அழித்துவிட அரசு திட்டமிட்டு சதி!

### தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

''கிழக்கில்இன்றுதேர்தலை சந்திக்கக் கூடிய நிலையில் மக்கள் இல்லை. பலர் அகதி முகாம்களில் இருக்கின்றனர். கிழக்கையும் வடக்கையும் பிரிக்கவும், இப்பகுதியில் பயங்கரவாதமே உள்ளது எனக் காட்டவுமே கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை அரசு நடத்துகின்றது என மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் தினமும் எந்த ஒருபகுதியாவது சுற்றிவளைக்கப்படுகிறது. பலர் கைதாகின்றனர். ஐ. தே. க அமைச்சர்கள் பிரசாரக் கூட்டம் நடத்தும்போது மக்கள் அங்கு செல்லாத காரணத்தால் படையினர் சுற்றி வளைத்து மக்களை அங்கு கூட்டிச் செல்கின்றனர்.

கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் பலத்தை அழித்து அவர்களை அவர்கள் மண்ணிலேயே அகதிகளாக்கும் நோக்கில் கிழக்கில் குடியேறிய பல சிங்களவர்களை வாக்களிக்க இத்தேர்தல் அரசினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிழக்கை தனியாகப் பிரிக்க நடத்தப்படவுள்ள சர்வஜன வாக்கெடுப்பிலும் இக்குடியேற்றக்காரர் பங்கு பற்றி தமிழர்களின் தலைவிதியை அவர்கள் தீர்மானிக்கவுள்ளனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுசேவை

கிளாலி - பூநகரி படகு சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி வேட்பாளர் கடத்தல்

## றெட்பானா அதிகாரிகள் இருவருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

கிழக்கு மாகாண உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் மூன்று அபேட்சகர்கள் கடத்திச் செல்லப்பட்டமை தொடர்பாக 'றெட்பானா' நிறுவனத்தைச் சேர்ந்த இருவரை 14 நாட்கள் மறியலில் வைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 'றெட்பானா' நிறுவனத்தின் பணிப்பாளரான ஏ பி. எஸ். பாலச்சந்திரனுக்கும் அதே நிறுவன சட்டத்தரணியான எஸ். தியாகராஜாவுக்கும் மேற்படி உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது.

## மீனவர் நிவாரணம் மார்ச் முதல் நிறுத்தம்

கடற்கரையோரம் மீதான தடைச்சட்டத்தை நீக்கிய சிறிலங்கா அரசாங்கம் கடற்றொழிலாளருக்கு வழங்கிவந்த தொழில் பாதிப்புக்கான மீனவர் நிவாரணத்தையும் மார்ச் முதலாம் திகதியுடன் நிறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அரசாங்க அதிபர் தெரிவிக்கையில் தொழில் பாதிப்புற்றிருந்த மீனவர்களுக்கு வழங்கிவந்த நிவாரணம் மார்ச் மாதம் முதலாம் திகதியுடன் நிறுத்தப்படுமெனவும், ஆனால் அதற்கு முற்பட்ட மாதங்களுக்குரிய நிவாரணம் வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

மன்னார் நகர் வடக்கிலிருந்து திருகோணமலைவரையான கடற்கரையோரத்திற்கு போடப்பட்ட தடைச்சட்டம் நீக்கப்பட்டுள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன.

(சி) (பா)

# வரி விளம்பரம்


### மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். சகல மணிக்கூட்டு பற்றறிகளும், உதிரிப்பாகங்களும் எம்மிடம் உண்டு. கஜன்ஸ் வாச் வேக்ஸ், இல: 12 ஸ்ரேசன் வீதி, சந்திக்கருகாமையில் சுன்னாகம். (7601)

### தேவை

வீடியோ டெக், கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள், சுசற் செற் வகைகள், மைக் மற்றும் எலத்திரனியல் பொருள்கள் நல்ல விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்பு: மின்லவம் இல. 81 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-8638)

### விற்பனைக்குண்டு

ஒருமாத பிறவுண் பேட்டுக் கோழிக்குஞ்சு உடன் விற்பனைக்குண்டு. ஆஷா கோழிப் பண்ணை, ஓராம் கட்டை, பிரதான வீதி, பருத்தித்துறை. (7614)

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

ஒருகிழமை வளர்ச்சியடைந்த கைலன் வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (7599)

### றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி உடன் வழங்கப்படும். இல: 288, நாவலர் வீதி, (யாழ். தனியார்வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7547)


### விமான நோட்டம்

(தொல்புரம்)

சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான குண்டு வீச்சு விமானம் ஒன்று நேற்று முன்தினம் பகல் 1 மணியளவில் வலிமேற்கு, வலிதென்மேற்கு வான்பரப்பில் சுற்றி வட்டமிட்டு மக்கள் குடியிருப்புக்களை நோட்டம் இட்டுச் சென்றது. இவ் விமானம் மாதகல், சுழிபுரம் பகுதிகளின் கரையோரப் பகுதிகளையும் அப்பகுதிகளை அண்


## 1-வது பிறந்த தின வாழ்த்து

26.02.94



### செல்வி ராஜசேகர் லஜித்தா

மீசாலை கிழக்கைச் சேர்ந்த ராஜசேகர் பரமேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வி லஜித்தா தனது முதலாவது பிறந்தநாளை 26-02-1994 (இன்று) வெகு விமரிசையாக தமது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, பெரியப்பா, பெரியம்மா, அம்மம்மா, நிதிஅக்கா, நிசாந்தன்அண்ணா, கபிலண்ணா மற்றும் உற்றார், உறவினர் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (7616)


## 45-ம் நாள் நினைவஞ்சலி



தாயவள் மடியில்

01-10-1974

தாயக மண்ணில்

13-01-1994

### கடற்புலி வீரவேங்கை சுதாஜினி

(தர்மலிங்கம் தர்மவதனி)

வன்னிமண் தன்னில் தோன்றி
வடபுலம் பயிற்சி பெற்று
பெண்புலி பரவுங் கடலில்
புதிதெனப் பணிகள் செய்தாய்
மண்ணினைக் காத்து நின்றாய்
மாவீரர் அணியில் சேர்ந்தாய்
விண்தொட நிமிர்ந்துன் கனவாம்
விடுதலைக் கீர்த்தம் சொல்வோம்.

வீரவேங்கை சுதாஜினியின் ஆத்மசாந்திக்காக 26-02-1994 இன்று சனிக்கிழமை நடைபெறும்

## உலங்குவானூர்தி பலதடவை பயணம்

நேற்று காலை முதல் மாலை வரை பல தடவைகள் சிறிலங்கா உலங்குவானூர்திகள் மண்டைதீவு மற்றும் பூநகரி கல்முனைப் பகுதிகளுக்கு சென்று பலாலி நோக்கி பறந்த வண்ணம் இருந்தன. (21)

### பெற்றுக்கொள்ளவும்

புங்குடுதீவைச் சேர்ந்த ஜெயரெத்தினம் கலைச்செல்வி என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

ஃ ஃ

பருத்தித்துறையைச் சேர்ந்த சாந்தாதேவி என்பவருடைய அடையாள அட்டை, வடபகுதிக்குள் நுழைவதற்கான அனுமதிச் சீட்டு மற்றும் சில பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உரியவர் பூநகரி பயணிகள் படகுச் சேவைப் பொறுப்பாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளவும்.

#### வடக்கில் அரசசார்பற்ற நிறுவனங்கள்

## செயற்பாட்டைக் கட்டுப்படுத்த அரசு திட்டமிட்ட முயற்சி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டை வடக்குப் பகுதியில் மட்டுப்படுத்தி வருவதாகவும் இதனால் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் பல நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் கருதப்படுகின்றது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை வரையறை செய்தல், நிதிகளை மட்டுப்படுத்துதல், பொருட்களைக் கொண்டு செல்வதற்கான அனுமதி வழங்கல் என்ற போர்வையில் காலதாமதப்படுத்துதல் போன்ற பல நடவடிக்கைகளை திட்டமிட்டுச் செயற்படுத்தி வருவதாகவும் தெரியவருகின்றது.

நேரடியாக இந்நிறுவனங்களைக் கட்டுப்படுத்த முடியாமையினால் மறைமுகமாக சட்டங்களைப்போட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டை வடபகுதியில் செயற்பட முடியாத அளவுக்கு மறைமுகமாக கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கான திட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை வெளிநாடுகளில் இருந்து வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு கிடைக்கும் நிதிகளிலிருந்து வடக்கு கிழக்கு மாகாணங்களின் எல்லையிலுள்ள சிங்கள கிராமங்களுக்கும், இஸ்லாமிய கிராமங்களுக்கும் உதவிகளை செய்கின்றது எனவும் தெரியவருகின்றது. (நி)

## மாணவி மீது சேட்டை இளைஞர்களுக்கு அபராதம்

(மல்லாகம்)

பாடசாலைக்குச் சென்ற பெண்ணின் பெயரைக் கூறி சேட்டை செய்தமைக்காக சுன்னாகம் நீதிமன்றினால் மூன்று இளைஞர்களுக்கு தலா ஐந்நூறு வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. இவர்கள் சாவகச்சேரியைச் சேர்ந்தவர்கள். (09)


## மாதாந்தம் 40 பெறுமதிமிக்க பரிசில்கள் உங்களுக்கு காத்திருக்கின்றது

இவற்றை வென்றிட நீங்கள் செய்ய வேண்டியது இதுவே

கீழே குறிப்பிட்ட போத்தல்களில் ஏதாவது ஐந்து (5) கீழே உள்ள எமது சேகரிப்பு நிலையத்தில் கொடுத்து போத்தலுக்குரிய பணத்தைப் பெறுவதுடன் ஒரு இலவச பரிசுச் சீட்டையும் பெற்றுக் கொள்ளுங்கள். ஒவ்வொருமாதமும் 5-ம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு மறுதினம் வெற்றி பெறுபவர்களின் சீட்டு இலக்கம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுவதுடன் தபாலட்டை வாயிலாகவும் அறிவிக்கப்படும்.

பின்வரும் போத்தல்கள் போட்டிக்கு எடுக்கப்படும்:

1. ஜாம் (புறோடினேக்ஸ்)
2. ஹொர்லிக்ஸ், வீவா (400g பிளாஸ்டிக் மூடியுடன்)
3. பியர்
4. கோடியல் (கறுப்பு & வெள்ளை)

பின்வரும் இடங்களில் போத்தல்களை ஒப்படைக்கவும்:
1. கந்தா மாஸ்ரர் - வட்டுக்கோட்டை 2. கந்தசாமி அன்சன்ஸ் - சங்கானை, 3. விஸ்கம் கூல்பார் - மானிப்பாய், 4. சபாரிஸ் - சுண்டுக்குளி, 5. பேப்பர் சொப் - இருபாலை, 6. சுபாலி பேக்கவுஸ் - நெல்லியடி, 7 பீடா சொப் - உடுப்பிட்டி, 8. செல்வராசா ஸ்ரோஸ் - பருத்தித்துறை, 9. மாருதி - வல்வெட்டித்துறை, 10. அறிவகம் - சாவகச்சேரி, 11. வாசுகி ஸ்ரோஸ் - சுண்டுக்குளி, 12. நியூ வசந்தா - சின்னக்கடை, 13. லங்காபதி - மல்லாகம், 14. தாஸ் ஸ்ரோஸ் - திருநெல்வேலி, 15 விநாயகர் - கல்வியங்காடு, 16. ஜெயசக்தி பார்மஸி - மருதனார்மடம், 17. யாழ்றன் ஸ்ரோஸ் - கொக்குவில், 18. சோதிடா புத்தக நிலையம் - இணுவில், 19. கபில் உணவகம் - பளை, 20. S R. மகேந்திரன் ஸ்ரோஸ் - கோண்டாவில், 21. அம்பிகை வர்த்தக நிலையம் - திருநெல்வேலி 22. சித்தி விநாயகர் நூல் நிலையம் - ஏழாலை, 23. பேரம்பலம் அன்சன்ஸ் - சுன்னாகம், 24. அன்புக் களஞ்சியம் - ஆஸ்பத்திரி வீதி, 25. டீன் ஸ்ரோஸ் - உடுவில், 26. வேல் களஞ்சியம் - தட்டாதெரு, 27. செல்வச் சன்னதி ஸ்ரோஸ் - வல்வெட்டித்துறை, 28. கிருஷ்ணா வர்த்தக நிலையம் - திருநெல்வேலி, 29. கேதீஸ்வரன் - உடுவில்.


## 6-ம் மாத நினைவஞ்சலி



### சின்னத்தம்பி சின்னத்துரை

மறைவு: 29 - 08 - 93

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

S. வரதராஜன் (மகன்)
மருமகள்
பேரப்பிள்ளைகள்: (பார்த்திபன்
(இளவேணி

200 பிரதான வீதி,
சுண்டுக்குளி. (சி-8715)

## நினைவு கூருகின்றோம்..

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி உடன் வழங்கப்படும். இல: 288, நாவலர் வீதி, (யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7547)

## விமான நோட்டம்
(தொல்புரம்)

சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான குண்டு வீச்சு விமானம் ஒன்று நேற்று முன்தினம் பகல் 1 மணியளவில் வலிமேற்கு, வலிதென்மேற்கு வான்பரப்பில் சுற்றி வட்டமிட்டு மக்கள் குடியிருப்புக்களை நோட்டம் இட்டுச் சென்றது. இவ் விமானம் மாதகல், சுழிபுரம் பகுதிகளின் கரையோரப் பகுதிகளையும் அப்பகுதிகளை அண்மித்த மக்கள் குடியிருப்புக்களையும் கூடுதலான நேரம் சுற்றி வட்டமிட்டதை அவதானிக்க முடிந்தது.


இதே தினம் காலை 7-20 மணியளவில் சிறிலங்கா வான் படையின் உலங்கு வானூர்தி ஒன்றும் வலிமேற்கு பகுதிகளின் வான்பரப்பில் மென் வேகத்தில் தாழப்பறந்து சென்றதையும், பின்னர் காரைநகர் பக்கமாக செல்வதுபோல் சென்று உடன் மீண்டும் குறித்த பகுதிகளின் ஊடாக பனாலிப்பக்கமாக சென்று மறைந்தது. வழமை போல் அல்லாது மேற்படி உலங்கு வானூர்தி மிகவும் தாழப்பறந்து சென்றதையிட்டு மக்கள் பீதியுடன் காணப்பட்டனர். (41)

## கம்பியூட்டர் கல்வி

BASIC LANGUAGE
4 MONTHS

திங்கள், புதன் வகுப்புகள்
ஆரம்பம்: 28-02-94
மணி: 10-30
கூடிய செய்முறைப் பயிற்சி
இலவச அச்சடித்த பாடக் குறிப்பு. பயிற்சி முடிவில் சான்றிதழ்.
கட்டணம்:
மாதம் 400/- மட்டுமே.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET,
JAFFNA.
(சி-8707)



தாயக மண்ணில்
13-01-1994

## கடற்புலி வீரவேங்கை சுதாஜினி
(தர்மலிங்கம் தர்மவதனி)

வன்னிமண் தன்னில் தோன்றி
வடபுலம் பயிற்சி பெற்று
பெண்புலி பரவுங் கடலில்
புதிதெனப் பணிகள் செய்தாய்
மண்ணினைக் காத்து நின்றாய்
மாவீரர் அணியில் சேர்ந்தாய்
விண்தொட நிமிர்ந்துன் கனவாம்
விடுதலைக் கீர்த்தம் சொல்வோம்.

வீரவேங்கை சுதாஜினியின் ஆத்மசாந்திக்காக 26-02-1994 இன்று சனிக்கிழமை நடைபெறும் மதிய போசன நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
அண்ணா, அக்கா,
அத்தான், தங்கைமார்,
உற்றார், உறவினர்கள்

52/5, ஆனந்தம் வடலி றோட்,
பபிசரன் வீதி,
கொழும்புத்துறை.
(7613)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
## இராசதுரை சோமசுந்தரம் (விஜயன்)

மண்ணில் 12-05-1931
விண்ணில் 27-01-1994

எங்கள் அன்புத் தெய்வமே!
குடும்பத்தலைவனாய் கொழுகொம்பாய்
பாசத் திருவுருவாய் பண்பின் இருப்பிடமாய்
நேசக்கரம் நீட்டி நித்தம் உடனிருந்து
தைப் பூசத்திருநாளில் தரணியை விட்டேகினதேன்
ஆறாத்துயர் கொண்டு அலறித்துடிக்கின்றோம்
மாறாப் பிறப்பெடுத்து எங்கள் பப்பாவருவதெப்போ

26-02-94 இன்று காலை எமதில்லத்தில் நிகழும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

-குடும்பத்தினர்.


சத்தியநாதன் வீதி,
கம்பர் மலை, வல்வெட்டித்துறை. (7612)

பின்வரும் இடங்களில் போத்தல்களை ஒப்படைக்கவும்: 1. சந்தா மாஸ்ரர் - வட்டுக்கோட்டை 2. சந்தசாமி அன்சன்ஸ் - சங்கானை, 3. விஸ்கம் கூல்பார் - மானிப்பாய், 4. சபாரிஸ் - சுண்டுக்குளி, 5. பேப்பர் சொப் - இருபாலை, 6. சுபாஸ் பேக்கவுஸ் -நெல்லியடி, 7 பீடா சொப்-உடுப்பிட்டி, 8. செல்வராசா ஸ்ரோஸ்-பருத்தித்துறை, 9. மாருதி -வல்வெட்டித்துறை, 10. அறிவகம்-சாவகச்சேரி, 11. வாசுகி ஸ்ரோஸ்- சுண்டுக்குளி, 12. நியூ வசந்தா - சின்னக்கடை, 13. லங்காபதி -மல்லாகம், 14. தாஸ் ஸ்ரோஸ் -திருநெல்வேலி, 15 விநாயகர்- கல்வியங்காடு, 16. ஜெயசக்தி பார்மஸி-மருதனார்மடம், 17. யாழ்றன் ஸ்ரோஸ் - கொக்குவில், 18. சோதிடா புத்தக நிலையம்-இணுவில், 19. கபில் உணவகம் - பலை, 20, S R. மகேந்திரன் ஸ்ரோஸ்- கோண்டாவில், 21. அம்பிகை வர்த்தக நிலையம்- திருநெல்வேலி 22. சித்தி விநாயகர் நூல் நிலையம்- ஏழாலை, 23. பேரம்பலம் அன்சன்ஸ் - சுன்னாகம், 24. அன்புக் களஞ்சியம் - ஆஸ்பத்திரி வீதி, 25. டன் ஸ்ரோஸ்-உடுவில், 26. வேல் களஞ்சியம்- தட்டாதெரு, 27. செல்வச் சன்னதி ஸ்ரோஸ் - வல்வெட்டித்துறை, 28. கிருஷ்ணா வர்த்தக நிலையம்- திருநெல்வேலி, 29, கேதீஸ்வரன் - உடுவில்.

உங்கள் அதிர்ஷ்டத்தை இன்றே பரீட்சித்துப் பாருங்கள்
நீங்கள் இழப்பது ஒன்றும் இல்லை

ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்.
14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(சி-8713)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சரவணமுத்து சபாபதி அவர்கள்
(ஓய்வுபெற்ற மலேசிய புகையிரதப் பகுதி மேற்பார்வையாளர்)

தோற்றம்: 1902 - 06 - 29
மறைவு: 1994 - 01 - 26

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளில் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கோவிந்தம்,
காரைக்கால் வீதி,
இணுவில்.

மக்கள், மருமக்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(7618)



## சின்னத்தம்பி சின்னத்துரை
மறைவு: 29 - 08 - 93

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

S. வரதராஜன் (மகன்)
மருமகள்
பேரப்பிள்ளைகள்: (பார்த்திபன்
(இளவேணி

200 பிரதான வீதி,
சுண்டுக்குளி.
(சி-8715)

## நினைவு கூருகின்றோம்..
## 1994. 02. 26

1986-ம் ஆண்டு இதேதினத்தில் கிளி-பரந்தன் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

பாலா (. . .)

1987-ம் ஆண்டு யாழ், சாவகச்சேரிப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த

லொயிட் (மணியம் விமலசேகர் - சாஸ்திரிகூழாங்குளம்-வவுனியா)

1989-ம் ஆண்டு முல்லைத்தீவு கோடாலிக்கல் பகுதியில் இந்தியப்படையினரின் பொறிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய,

ஜஸ்ரின் (ஆறுமுகம் புலேந்திரன்-முள்ளியவளை-முல்லைத்தீவு)

கிளி-ஆனையிறவு, சுண்டிக்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய,

லெப் சரத் (லேஞ்சிபூஸ் பீற்றர் கெனடி-தாளையடி, வடமராட்சி கிழக்கு-யாழ்)

முல்லைத்தீவு-வற்றாப்பளைப் பகுதியிற் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட முள்ளியவளையைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991-ம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்திருந்து யாழ் மருத்துவமனையில் வீரச்சாவெய்திய,

பாலேந்திரன் (குமாரசாமி பாலசுப்பிரமணியம்-நாவற்காடு, முள்ளியவளை-முல்லைத்தீவு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட குமாரவேலியா கிராமத்தைச் சேர்ந்த 02 தமிழிளைஞர்கள்.

1992-ம் ஆண்டு வவுனியா-பம்பைமடுச்சந்தியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

லெப்.ராதா (சட்டநாதபிள்ளை சேதீஸ்வரன்-திரியாய்-திருமலை)

வசந்தராஜ் (சின்னையா நாகேந்திரன்-கணேசபுரம்-வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்
(சி-8711)

யாழ்ப்பாணம்

# புலிகளிடம் இருந்து தொடர்ந்தும் நல்லெண்ண சமிக்கை கிடைக்கின்றன

## கத்தோலிக்க துறவறச்சபைத் தலைவர் வண. அலெக்சாண்டர்

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகள் தரப்பில் இருந்து இதுவரை காலமும் சமாதான முயற்சிகளுக்கான நல்ல சமிக்கைகளே கிடைத்து வருகின்றன இதனை நாம் மனதார ஏற்றுக்கொள்கிறோம். ஆயினும் இவர்களது சமிக்கைக்கு நல்ல பலாபலன்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்பதே இன்றைய உண்மை நிலையாகும் என கத்தோலிக்க துறவற சபைகளின் தலைவர் அருட்திரு அல்பிறெட் அலெக்சாண்டர் தெரிவித்தார்.

நேற்றைய முன்தினம் சமாதானபேச்சுவார்த்தைக்கான ஓர் உந்து கோலாக விடுதலைப்புலிகளால் யுத்தக்கைதிகளான இரு சிறிலங்கா பொலிசார் விடுவிக்கப்பட்டனர். இந்நிகழ்வைத் தொடர்ந்து பிதா அல்பிறெட் அலெக்சாண்டர் ஈழநாதம் பத்திரிகைக்கு வழங்கிய விசேட பேட்டியின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான முதல் கட்ட பேச்சுவார்த்தை கடந்த மாதம் இறுதியில் நடைபெற்றது. இதன்போது நாம் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தினோம். பின்பு கொழும்பு சென்று சிறிலங்கா பிரதமர் இராணுவ தளபதி ஜெரி டி சில்வா, அமைச்சர் ஜோன் அமரதுங்க உட்பட பலருடன் இப்பேச்சுக்கள் குறித்து விளக்கினோம் இதனைத் தொடர்ந்து இராணுவ தளபதி ஜெரி டி சில்வா தலைமையில் அவசர கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. இது குறித்த முடிவுகள் எதுவும் எமக்கு தெரிவிக்கப்படவில்லை.

தற்போது அரச தரப்பினருடன் பேசிவிட்டு மீண்டும் விடுதலைப்புலிகளுடன் இரண்டாம் கட்டமாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம் இச் சமாதான பேச்சுவார்த்தைகள் குறித்துமிகவும் நிதானமாகவும் மெதுவாகவுமே நகர்த்திச் செல்ல விரும்புகிறோம். தற்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து அரசதரப்பினருக்கும் அரச உயர் அதிகாரிகளுக்கும் தெளிவாக எடுத்து விளக்கவுள்ளோம்.

எவ்வளவு இடையூறுகள் நேர்ந்தாலும் நாம்சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வோம் இச் சமாதான முயற்சிகள் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையில் சகலரும் ஒன்றிணைந்து மேற்கொள்வதன் மூலம் நிச்சயமாக சமாதானம் கிட்டும் என எதிர்பார்க்கிறேன்.

உள்ளூர் கத்தோலிக்க கிறிஸ்தவ அமைப்புக்களினால் இது குறித்து நல்ல பலாபலன்களைப் பெற்றுத்தர முடியாவிட்டால் வெளிநாட்டு அமைப்புகளுடன் தொடர்பு கொண்டாவது அதனைப் பெற்றுத்தர முயற்சிகளை மேற்கொள்வோம். இதற்காக தற்பொழுது பிரிட்டன், அமெரிக்கா, போன்ற நாடுகளுடன் பேசி வருகிறோம். அவர்கள் இது குறித்த தமது முடிவுகளை இதுவரை எமக்கு தெளிவாக கூறவில்லை என்றார்.

### கமச் சீராக்கல்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் சமூக மேம்பாடு கருதி முன்னெடுக்கப்படும் கிராமிய மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் யாழ் மாவட்டத்தில் நவக்கிரி கிராமத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஏழு குடும்பங்களிற்கு கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலம் கமத்தொழில் நடவடிக்கைகளைச் சீராக்குவதற்கென தலா 5000 ரூபா வீதம் மொத்தம் ரூபா 35000 வழங்கப்பட்டுள்ளது.

# இனப்பிரச்சினையை விரைவில் தீர்க்க முயற்சிகள் நடைபெறுகின்றன

## அமைச்சர் தயாரட்னா

(மட்டக்களப்பு)

நாட்டின் இனப்பிரச்சினையை குறுகிய காலத்தில் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எந்த நேரத்திலும் பேச்சுவார்த்தை ஆரம்பமாகக்கூடிய சூழ்நிலை உருவாகிவருகிறது. இத்தகைய சூழ்நிலை வெற்றியளிக்கும் பட்சத்தில் இன்று யுத்தத்திற்காக செலவிடப்படும் பணம் முழுவதும் நாட்டின் அபிவிருத்திக்கு செலவு செய்யப்படும் அதன்பின் இலங்கை பொன் கொழிக்கும் நாடாகும் இவ்வாறு அம்பாறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய புனர்வாழ்வு புனரமைப்பு சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரட்னா தெரிவித்தார்.

இன்று ஐ. தே. கவிக்தான் நல்ல தலைமைத்துவம் உள்ளது என்பதை உணர்ந்து மாற்று கட்சிகளில் காலம் காலமாக உழைத்துவந்தவர்கள் அவற்றை உதறிவிட்டு ஐ. தே. கவில் இணைகின்றனர் எனவும் இன்று நாட்டிலுள்ள இனப்பிரச்சினையை மிக குறுகிய காலத்தில் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் அமைச்சர் தயாரட்ன மேலும் தெரிவித்தார்.

### காய்ச்சலுக்கு சிறுமி பலி

காய்ச்சலுக்கு இலக்காகி பதினொரு வயது சிறுமி ஒருவர் கடந்த செவ்வாய்க் கிழமை பலியானார். நாகர் கோயிலைச் சேர்ந்த இச் சிறுமி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து வரும்போது இடைநடுவே இறந்துள்ளார். (யோ)


யாழ்ப்பாண மாநகரசபை

**துவிச்சக்கர வண்டிக்கான உரிமம் - 1994**

1994ம் ஆண்டிற்குரிய துவிச்சக்கரவண்டி உரிமம் பெறாதவர்கள் 31-3-1994க்கு முன் அவற்றைப் பெற்றுக்கொள்வதன் மூலம் எம்முடன் ஒத்துழைத்து அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மாநகர அலுவலகம், மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம்
1994-02-24. (சி-8710)



**இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின்**

**14-வது இசை விழா**

**15-ம் நாள் 26.2.94**

**சனிக்கிழமை**

**வீரவேங்கை கஸ்ரோ (இயல்வாணன்)**
**வாரிவளவு காரைநகர் ஆதரவில்**

மாலை

**4.00 - 5.00 மங்கள இசை**

என். ஆர். கே. ரத்னகுமார் )
என். ஆர். கே. வாகீஸ்வரன் ) நாதஸ்வரம்
என். ஆர். எஸ். சுதாகரன் )
கே. சிவகுமார் ) தவில்
எஸ். சொர்ணலிங்கம் )

**5.00 - 5.20 பாட்டு**

| | |
|---|---|
| பா. சர்மிளா | ஜெ. றளித்தா |
| சோ. கமலாஜோதி | த. பாமினி |
| நா. பாமினி | ரா. கவிதா |
| இ. அஷ்டலட்சுமி | க. ரூபநிதி |
| கு. றேமளா | இ. புஷ்பமலர் |
| ச. தாட்சாயினி | த. நாகேஸ்வரி |
| சூ. கனிஷியா | யோ. ஜெயபாரதி |
| தி. கீதா | சி. பிரியதர்ஷினி |
| வி. இலற்றீஷியா | இ. லதா |


# மட்டு. மாவட்டத்தில் 10பொலிசார்இடைநிறுத்தம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் லஞ்சக் குற்றச் சாட்டின் பேரில் பத்து பொலிசார் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

மஞ்சத்தொடுவாய், வாழைச்சேனை போன்ற பகுதிகளில் கடமையாற்றிய பொலிசாரே இவ்வாறு லஞ்சக் குற்றச்சாட்டின் பேரில சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டவர்களாவர். மரம், சீமெந்து போன்ற பொருள்களைக் கடத்துவதற்கு லஞ்சம் பெற்று உதவியதாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இதுதொடர்பான விசரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பேராதனை பல்கலைக்கழகம்

# வெளிவாரி மாணவரை கட்டுப்படுத்த புதிய விதி

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவர் தொகையைமட்டுப்படுத்த பேராதனை பல்கலைக்கழகம் புதிய சட்ட விதிகளை அமுல்படுத்த இருப்பதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் இருந்து வந்த மூன்று பாடங்களில் சித்திபெற்றால் போதுமானது என அறிவிக்கப்பட்ட போதும் இனிமேல் இவர்கள் 180க்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும் என்றும் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்றவர் என பரீட்சை பெறுபேற்றில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது. (நி)

# அபுதாபியில் இருந்து புறப்பட்ட விமானத்தைக் கொளுத்த சிங்கள இளைஞன் முயற்சி

### நிறுவனர்க்கு நினைவுச் சிலை

(அச்சுவேலி)

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையை நிறுவிய திரு. ச. குமாரசாமிக்குருக்கள் அவர்கட்கு நினைவுச்சிலை ஒன்றை எடுப்பதற்கு அச்சுவேலி பழைய மாணவர் சங்


**90-ம் நாள் நினைவஞ்சலி**



தாயின் மடியில்
1975-12-08

தாயக மண்ணில்
1993-11-26

**2-ம் லெப். செங்கையன்/நிரஞ்சன்**

**(மகாதேவன் சுதாகரன்)**

சுதா,
ஐந்தாண்டு காலமாக உன்முகம் காணாமல்
நீ எங்கள் முகம் காணாமல்
தமிழீழ மண்ணுக்காய் வீரகாவியமானாய்
இனி எப்போது உன் முகம் காண்போமோ?

நின் பிரிவால் துயருறும், உனது
அன்பு அம்மா, ஆருயிர் அப்பா,
இனிய சகோதரர்கள் (சுரேன், கண்ணா),
அப்பம்மா, சித்திமார், சித்தப்பாமார்,

## வாரிவளவு காரைநகர் ஆதரவில்

மாலை

**4.00 - 5.00 மங்கள இசை**

என். ஆர். கே. ரத்னகுமார் )
என். ஆர். கே. வாகீஸ்வரன் ) நாதஸ்வரம்
என். ஆர். எஸ். சுதாகரன் )
கே. சிவகுமார் ) தவில்
எஸ். சொர்ணலிங்கம் )

**5.00 - 5.20 பாட்டு**

| | |
|---|---|
| பா. சர்மிளா | ஜெ. றளித்தா |
| சோ. கமலாஜோதி | த. பாமினி |
| நா. பாமினி | ரா. கவிதா |
| இ. அஷ்டலட்சுமி | க. ரூபநிதி |
| கு. றேமளா | இ. புஷ்பமலர் |
| ச. தாட்சாயினி | த. நாகேஸ்வரி |
| கு. கனிஷியா | யோ. ஜெயபாரதி |
| தி. கீதா | சி. பிரியதர்ஷினி |
| வி. இலற்றீஷியா | இ. லதா |

ரேணுகா தனபாலரெட்ணம் - வயலின்
ம. கஜன் - மிருதங்கம்

**5.20 - 5.45 வயலினிசை**

சுபத்திரா கணேசன் - வயலின்
எஸ். துரைராசா - மிருதங்கம்

**5.45 - 6.15 பாட்டு**

எஸ். ஜெயந்தி - பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
எஸ். துரைராசா - மிருதங்கம்

**6.15 - 7.00 பாட்டு**

ராதிகா சுப்ரமணியம் - பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
கே. கண்ணதாஸன் - மிருதங்கம்

**7.00 - 7.30 மங்கள விளக்கேற்றல்**

அன்பரசன் - (கலைபண்பாட்டுக் கழகம்)
கலைமணி - (கலைபண்பாட்டுக் கழகம்)

தலைவர்:- சேரலாதன் (துணைப்பொறுப்பாளர் கலைபண்பாட்டுக் கழகம்)
பிரதம விருந்தினர்:- புதுவை இரத்தினதுரை (பொறுப்பாளர், கலைபண் பாட்டுக் கழகம்)
சிறப்பு விருந்தினர்:- சி. கரிகாலன் (தமிழீழ அரசியல்துறை)
எஸ். சோமசுந்தரம் (சமூகசேவையாளர்)

**7.30 - 8.30 இசைக் கச்சேரி**

எஸ். பத்மலிங்கம் - பாட்டு
உடன் பாடுபவர்:- R. குகானந்தன்
ஆர். ராதாகிருஷ்ணன் - வயலின்
எம். சிதம்பரநாதன் - மிருதங்கம்
எஸ். நாகராஜன் - கஞ்சிரா
எஸ். ராஜா - முகர்சிங்

**8.30 - 9.30 இசை நாடகம்**

V. N. செல்வராஜா, V. செல்வரத்தினம்
ஆகியோர் இணைந்து வழங்கும்
''வள்ளி திருமணம்''

வாழ்த்துவோர்:
**சைமன் வர்த்தக நிலையம்**
பலாலி றோட், திருநெல்வேலி.

(கி - 8712)

## வெளிவாரி மாணவரை கட்டுப்படுத்த புதிய விதி

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவர் தொகையைமட்டுப்படுத்த பேராதனை பல்கலைக்கழகம் புதிய சட்ட விதிகளை அமுல்படுத்த இருப்பதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் இருந்து வந்த மூன்று பாடங்களில் சித்திபெற்றால் போதுமானது என அறிவிக்கப்பட்ட போதும் இனிமேல் இவர்கள் 180க்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும் என்றும் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்றவர் என பரீட்சை பெறுபேற்றில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது. (நி)

## அபுதாபியில் இருந்து புறப்பட்ட விமானத்தைக் கொளுத்த சிங்கள இளைஞன் முயற்சி

(கொழும்பு)

அபுதாபியில் இருந்து புறப்பட்ட வெளிநாட்டு விமானமொன்றை தீ வைத்துக் கொளுத்த முயன்ற சிறிலங்கா இளைஞன் ஒருவர் விமான சிப்பந்திகளினால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இவர் தென்பகுதி தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர் எனவும், இவர் தீ வைக்க முயன்ற விமானத்தில் 80க்கு மேற்பட்டோர் இருந்தனர் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

## பாராளுமன்ற ஒத்திவைப்பு எதிர்க்கட்சிகள் ஆட்சேபம்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்ற கூட்டத்தொடரை மார்ச் மாதம் 22ஆம் திகதிவரை ஒத்திவைக்கும் பிரேரணை நேற்று சிறிலங்கா பாராளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிர் கட்சித் தரப்பிலிருந்து பலத்த எதிர்ப்புக் கிளம்பியது.

அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லா தீர்மானத்தை அரசாங்கம் முகம் கொடுக்கபயந்தும், இதனால் தென்மாகாணசபை பாதிப்பு ஏற்படும் என அஞ்சுவதினாலே அரசாங்கம் இந்த முடிவையெடுத்ததாக குற்றம் சாட்டினார்கள்.

காமினி திசாநாயக்காவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியும், அமைச்சர் பதவியும் வழங்கப்படவிருப்பதாகவும் இதனால் ஆளும் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் இடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமையே இதற்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் பரஸ்பரம் எதிர்க் கட்சிகள் அரசாங்க கட்சியைகுற்றம் சாட்டின.

தம் செய்யப்பட்டவர்களாவர். மரம், சீமெந்து போன்ற பொருள்களைக் கடத்துவதற்கு லஞ்சம் பெற்று உதவியதாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இதுதொடர்பான விசரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## நிறுவனர்க்கு நினைவுச் சிலை

(அச்சுவேலி)

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையை நிறுவிய திரு. ச. குமாரசாமிக்குருக்கள் அவர்கட்கு நினைவுச்சிலை ஒன்றை எடுப்பதற்கு அச்சுவேலி பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துவருகின்றது.

எதிர்வரும் சித்திரைமாதத்தில் நடைபெறவுள்ள பவள விழாவின்போது இச் சிலை திறந்து வைக்கப்பட உள்ளது பிரபல சிற்பியும் கொக்குவில் இந்துக்கல்லூரி சித்திர ஆசிரியருமான திரு ச, துரைவீரசிங்கம் (சிங்கி) அவர்கள் இந்த சிலையை உருவாக்கி வருகின்றார்.

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் சிறி ஞானவைரவர் ஆலய 42ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது.

இதன் புதிய தலைவராக க. பாலசுப்பிரமணியமும், உப-தலைவராக த. சோமசுந்தரமும், செயலாளராக மு. விமலநாதனும், உபசெயலாளராக ந. சர்வகுணசீலனும், பொருளாளராக ச. தவநேசனும் தெரிவாகியதுடன் நான்கு நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவாகினர்.

## தமிழருக்கு காணி வழங்குவதை நிறுத்தக் கோரி பிக்குகள் பேரணி

(கொழும்பு)

தமிழர்களுக்கு காணிகள் வழங்குவதை அரசு நிறுத்த வேண்டும் எனக் கோரி பௌத்தகுருமார் கடந்த மாதம் ஒன்பதாம் திகதி ஊர்வலம் நடத்தினர்.

மகா பெரிதென்னையிலுள்ள தேசிய அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான 17 ஏக்கர் காணியை உல்லாச பிரயாணத்துறை அமைச்சு மேற்படி துறைக்கே கையளித்துள்ளது. அக்காணியில் 217 தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன.

இவர்களுக்கு இக் காணிகளுக்கு பதிலாக 40 பேர்ச் காணியும் ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான வீடொன்றும் கட்டித்தருவதாக கடந்த டிசம்பர் 29ஆம் திகதி கொழும்பில் உல்லாச பிரயாணத்துறைஅமைச்சில்நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது ஒப்புக் கொள்ளப் பட்டது.

கடந்த வருடம் மேற்படி பண்ணைக்குச் சொந்தமான கால்நடைகளும் கோழிகளும் வேறுபண்ணைகளுக்கு அனுப்பப்பட்டன இதே வேளை கடந்த ஜனவரி ஒன்பதாம் திகதி அந்த தோட்ட முகாமையாளர் எகலோபிட்டிய நிலமே அங்கு பௌத்த குருமாரை அழைத்து இனவாதரீதியில் தமிழர்களுக்கு காணிவழங்கக் கூடாது எனக் கூறி ஊர்வலம் ஒன்றையும் நடாத்தினர்.



தாயக மண்ணில்

1993-11-26

## 2-ம் லெப். செங்கையன்/நிரஞ்சன்

### (மகாதேவன் சுதாகரன்)

சுதா,
ஐந்தாண்டு காலமாக உன்முகம் காணாமல்
நீ எங்கள் முகம் காணாமல்
தமிழீழ மண்ணுக்காய் வீரகாவியமானாய்
இனி எப்போது உன் முகம் காண்போமோ?

நின் பிரிவால் துயருறும், உனது
அன்பு அம்மா, ஆருயிர் அப்பா,
இனிய சகோதரர்கள் (சுரேன், கண்ணா),
அப்பம்மா, சித்திமார், சித்தப்பாமார்,
தங்கைமார், மாமாமார், மாமிமார், மச்சாள்,
மச்சான்மார், உற்றார், உறவினர், நண்பர்கள்,

17, பலாலி றோட்,
இலுப்படிச்சந்தி.

(7593)

## 41-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### உலகநாதன் ஆதவன்

அன்னை மடியில்: 26-05-1987
ஆண்டவன் அடியில்; 17-01-1994

அன்பு மகனின்இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டும் எமக்கு ஆறுதல் கூறியும் பல வழிகளிலும் உதவிகள் வழங்கிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (26-02-94) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

சு. உலகநாதன்
கிராமசேவை அலுவலர்

(7594)

# நாம் வாக்களிக்கும் இயந்திரமல்ல! நாமும் இந்நாட்டு மன்னர்களே!

### அமைச்சர் தொண்டமான்

(கண்டி)

நாம் கட்சிகளுக்கு வாக்களிக்கும் இயந்திரம் மட்டும் தான் என்று இன்றும் சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அது முட்டாள் தனமான எண்ணம் என்பதை அவர்களுக்கு உணர்த்துவதுடன் நாமும் இந்த நாட்டை ஆளும் மன்னர்கள் என்பதையும் அவர்களுக்கு உணர்த்த வேண்டும். கடந்த 50 வருடகாலமாகக் கட்டிக்காத்த ஒற்றுமையையும் கட்டுக்கோப்பையும் தொடர்ந்தும் கட்டிக்காப்போம். நாமும் ஏனைய மக்களைப்போல் உரிமைகளையும் சலுகைகளையும் பெற்று தன்மானமுள்ள சமுதாயமாக வாழ முடியும். நாம் அரசிடம் மேலதிகமாக எதையும் கேட்கவில்லை. ஏனையமக்களுக்கு வழங்கப்படும் உரிமைகளையும் சலுகைகளையுமே கேட்கிறோம். ஆனால் நாம் உரிமைகளைக் கேட்கும் போது அதற்குஇனவாதம் பூசப்படுகிறது என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் உல்லாச கிராமிய கைத்தொழில்துறை அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிறு மாலை கலாபொலகதமிழ் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்கூட்டத்திலேயே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் உரையாற்ற அமைச்சர் தொண்டமான் எழுந்த போது 'நீங்கள் எமது சமுதாய நலன் கருதி எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் நாம் எமது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக இருக்கிறோம்' என்று கூட்டத்தில் இருந்தவர்கள் ஒரே குரலில் தெரிவித்தனர்.

தொடர்ந்து அமைச்சர் உரையாற்றுகையில்; குறிப்பிட்ட ஓர் இனத்திற்கு மட்டும் சலுகைகளை வழங்க எண்ணினால் நாட்டின் ஒற்றுமைக்கும் ஐக்கியத்திற்கும் பங்கம் ஏற்படுவதோடு இனங்களுக்கிடையே கசப்புணர்வும் அமைதியின்மையும் ஏற்படவே அது வழி வகுக்கும்.

மக்களாகிய நீங்கள் காட்டும் ஆர்வத்தையும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதில் நீங்கள் காட்டும் அக்கறையும் என்னைப் பெரும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இங்கு திரண்டிருக்கும் கூட்டத்தைப் பார்க்கும் போது எமது சமுதாயம் இன்னும் பல சகாப்தங்களுக்கு தலை நிமிர்ந்து நிற்கும் சக்தியைக் கொண்டுள்ளது என்பதை எனக்கு உறுதியாக்குகிறது ஏனைய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளையும் சலுகைகளையும் எம்மவர்கள் எமக்கும் பெற்றுக்கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையிலேயே என் சொல்லுக்கு செவிமடுத்த எம் மக்கள் இங்கு நடைபெற்று முடிந்த தேர்தல்களில் இ.தொ.கா. சார்பில் போட்டியிட்டவர்களை வெற்றிபெறச் செய்து பாராளுமன்றத்திற்கும் மாகாண, நகர, பிரதேச சபைகளுக்கும் அனுப்பிவைத்தார்கள். எமது சமுதாயமுன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் கட்சிகளுக்குத்தான் நாம் வாக்களித்து வருகிறோமே தவிர எந்தவொரு குறிப்பிட்ட அரசியல் கட்சியையும் பதவியில் அமர்த்த வேண்டும் என்பது எமது நோக்கமல்ல. அது எமக்கு அவசியமும் அல்ல முன்னாள் ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாசா போன்றவர்களது புரிந்துணர்வு, நல்லுறவு ஆகியவற்றின் காரணமாகத்தான் ஐ.தே.கவிற்கு ஆதரவளித்து அதை வெற்றிபெறச் செய்தோம்.

சிறிலங்காவில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்பவர்கள் பெரும்பான்மை இன மக்களுக்கு மாத்திரமல்ல, சிறுபான்மையின மக்களுக்கும் ஜனாதிபதியாகும். பல்லின மக்கள் வாழும் ஜனநாயக நாட்டில் அனைத்து இன மக்களையும் அரவணைத்து செல்வதன் மூலம்மட்டுமே நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப் பாட்டையும் பொருளாதாரச் சுபீட்சத்தையும் ஏற்படுத்த முடியும்.

எமது உரிமைகளை நாம் பெற்றுக் கொள்ள யாருக்கும் பொன்னாடை போர்த்தி பூமாலை சாத்தி அடிபணிய வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. அந்த நிலையிலும் இன்று நாம் இல்லை. யாருக்கும் பயந்தோ, கெஞ்சியோ, மண்டியிட்டோ வாழ வேண்டிய அவசியம் எமக்கில்லை. எமது ஒன்றுபட்ட சக்தியின் மூலம் உரிமைகளையும் சலுகைகளையும் பெற்று மானத்தோடும் மரியாதையோடும் வாழும் நிலைக்கு இன்று நாம் உயர்ந்துள்ளோம்.

இந்த நாட்டில் 150 வருடங்களாக நாம் வாழ்ந்து வருகின்றபோதிலும் எந்த ஓர் அரசாங்கமும் தானாக முன்வந்து எமக்கு எந்தவொரு சலுகைகளையும் வழங்க முன்வரவில்லை என்றார்.

## காலியில் 3 தமிழர் கைது

(கொழும்பு)

தொழில் பெற்றுக் கொள்வதற்காக வடபகுதியிலிருந்து காலிக்கு சென்ற மூவரை காலிப்பொலிசார் கைதுசெய்துள்ளனர். தொடர்ந்து இவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

## இலவச வகுப்புகள்

(தொல்புரம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும் சிறுப்பிட்டி குமுதன் கல்வி வளர்ச்சிக் கழகத்தில் இலவச கல்வி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்று வரும் மேற்படி இலவச கல்வி வகுப்புகளில் பகல் வேளை ஆண்டு 1 முதல் ஆண்டு 10 வரையிலான வகுப்பு மாணவர்க்கு சிறந்த முறையில் கல்வி போதிக்கப்படுகின்றன. (41)

## பிறந்த தின வாழ்த்து

## மாணவர் மூக்கு கண்ணாடி கடற்படையால் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பார்வை குறைந்த மாணவர்களுக்கு வழங்குவதற்கென றெட்பானாவால் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்ட மூக்குக் கண்ணாடிகளை சிறிலங்கா கடற்படையினர் பறித்துள்ளனர்.

சிறிலங்கா அரசின் அனுமதி பெற்று கொண்டுவரப்பட்ட சுமார் 125 மூக்குக் கண்ணாடிகளை திருக்கோணமலை துறைமுகத்தில் வைத்தே சிறிலங்கா கடற்படையினர் பறித்தனர்.

வவுனியா நகருக்குள்

## ஆயுதங்களுடன் நடமாட தமிழ்குழுக்களுக்கு தடை

(வவுனியா)

உள்ளூராட்சி தேர்தல் முடியும் வரை வவுனியா நகருக்குள் எந்தவொரு தமிழ் குழுக்களும் ஆயுதங்களுடன் நடமாட சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் வட பிராந்திய பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா, வவுனியா இராணுவ அதிகாரி பிரிகேடியர் சாலியகுலதுங்க ஆகியோருக்கு அவசர உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார்.

## தமிழ் பொது விவிலிய நூல் ஏப்ரலில் வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பொது விவிலிய நூல் வெளிவரவுள்ளது. வரும் தமிழ் புத்தாண்டு தினமான ஏப்ரல் 14-இல் பொது விவிலிய வெளியீட்டு விழா சென்னையில் நடைபெறும் கத்தோலிக்க மெதடிஸ்த அங்கிலிக்கன், தென்னிந்திய திருச்சபைகள் மேற்கொண்ட முயற்சியால் இந்தப் பொது விவிலியம் உருவாகியுள்ளது. மேற்படி திருச்சபைகளின் பொது வெளியீடாக இது அமையும்

வத்திக்கான் ஒன்றிப்புச் செயலகமும், விவிலிய சங்கங்களின் இணையமும் சேர்ந்து 1968இல் மேற்கொண்ட முடிவே இந்தப்பொது விவிலியத்துக்கான காரணமாகும், ஆங்கிலம் ஜேர்மன், பிரஞ்சு மொழிகளில் பொது மொழிபெயர்ப்பு பல ஆண்டுகளுக்குமுன்னரே வெளிவந்தது குறிப்பிடத்தக்கது

## கிளி. வைத்தியசாலை மருந்துகள் வரவில்லை

(நமது நிருபர்)

கிளிநொச்சி மருத்துவமனைக்கான இவ்வாண்டுக்குரிய முதலாம் தவணை மருந்துகள் இதுவரை வந்துசேரவில்லை என தெரியவருகின்றது

இம் மருத்துவமனைக்கான மருந்துப்பொருள்களை கொழும்பிலிருந்து எடுப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடிய போது தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகன அணி கொழும்பிலிருந்து தரைவழியாக பொருள்களை எடுத்துவருவதை நிறுத்தியுள்ளதால் அம்முயற்சியும் கைகூடவில்லையென தகவல்கள் தெரிவிக்கின்றன (சி)

## பார்வை குறைந்தவர்க்கு மூக்குக்கண்ணாடி

(யாழ்ப்பாணம்)

கண் பார்வை குறைந்த மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்க யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் கோட்டக் கல்வி அலுவ...

இலவச மூக்குக் கண்ணாடி தேவைப்படும் மாணவர்களின்பெயர்ப்பட்டியலையும், கண் வைத்திய நிபுணரால் பரிசோதித்து வழங்கப்பட்ட அறிக்கையையும், அதன் நிழ...

## கிளர்ச்சியாளருக்குப் பொதுமன்னிப்பு வழங்குக

### ரஷ்ய பாராளுமன்றம் தீர்மானம்

(டில்லி)

ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் ஜெல்ட்சினுக்கு எதிராக கடந்த ஆண்டு அக்டோபரில் இராணுவப்புரட்சி செய்தவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கும் தீர்மானத்தை ரஷ்ய பாராளுமன்றம் நிறைவேற்றி இருக்கிறது.

அமோக ஆதரவுடன்பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்த தீர்மானத்தின் கீழ் 1991ஆம் ஆண்டில் முன்னாள் அதிபர்மிகையில்கொர்பசேவின் ஆட்சியை கலைப்பதற்கு முயன்றவர்களுக்கும் கடந்த ஆண்டு மே மாதம் நடைபெற்ற கலகங்களுக்கு காரணமானவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட கம்யூனிஸ்டுகளுக்கும் இந்த பொது மன்னிப்பு வழங்கப் படவுள்ளது.

## கதிரியக்க ஆயுதங்களுக்கு தடைவிதிக்க வேண்டும்

### சர்வதேச செஞ்சிலுவை கோரிக்கை

(ஜெனிவா)

மிதிவெடிகள் மற்றும் கண்களைக் குருடாக்கும் கதிரியக்க ஆயுதங்கள் போன்றவற்றின் உற்பத்திக்கு தடைவிதிக்க வேண்டும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைமை அலுவலகம் கோரிக்கை விதித்துள்ளது. பாரிய காயங்களையும், பலத்த பாதிப்புக்களையும் ஏற்படுத்தும் ஆயுதங்களின் உற்பத்திக்கு தடைவிதிக்க வேண்டுமென்னும் முயற்சியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டுள்ளது.

## தமிழாராய்ச்சி மாநாடு தஞ்சையில் கலையரங்கம்

(சென்னை)

உலகத் தமிழ் மாநாடு அடுத்த ஆண்டு தஞ்சாவூரில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டை சிறப்புற நடாத்துவதற்கான முன்னேற்பாட்டு கூட்டம் கடந்த புதன்கிழமை சென்னையில் நடைபெற்றது.

இந்தியாவில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் 800க்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்கள், பன்மொழிப் புலவர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளனர். இம்மாநாட்டுக்கென புதிய கலையரங்கம் ஒன்றை அமைப்பதற்கும் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இம்மாநாட்டில் பெருமளவு மக்கள் கலந்து கொள்வார்களென்பதால் பல முன்னேற்பாடுகள் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விழாவின் தொடக்கநாளை அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி நடத்துவதெனவும் அன்று மாலை பிரமாண்டமான பேரணி ஒன்றை நடத்துவதெனவும் விழாவின் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## பாகிஸ்தான் முயற்சி தோல்வியிலேயே முடியும்

### இந்திய தரப்பு நம்பிக்கை

(டில்லி)

காஷ்மீர் மாநிலத்தில் மனித உரிமைகள் மீறப்படுவதாக ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் தீர்மானம் நிறைவேற்ற பாகிஸ்தான் எடுக்கும் முயற்சிகள் தோல்வியிலேயே முடிவடையும்என்று எதிர்பார்ப்பதாக புதுடில்லியில் கூறப்பட்டுள்ளது.

ஜெனிவாவிலிருந்து கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் ஐம்பத்து மூன்று நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்ட ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் ஓர் அங்கத்தவரினதும் ஆதரவைப் பெற பாகிஸ்தானினால் முடியவில்லை என்றும், பாகிஸ்தான் இது விடயத்தில் தனித்து விடப்படும் சூழ்நிலை உருவாகி இருப்பதாகவும் மேலும் தெரியவந்துள்ளது

## பாக். தூதுவராலயமும்

மான் எழுந்த போது 'நீங்கள் எமது சமுதாய நலன் கருதி எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் நாம் எமது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக இருக்கிறோம்' என்று கூட்டத்தில் இருந்தவர்கள் ஒரே குரலில் தெரிவித்தனர்.

தொடர்ந்து அமைச்சர் உரையாற்றுகையில்; குறிப்பிட்ட ஓர் இனத்திற்கு மட்டும் சலுகைகளை வழங்க எண்ணினால் நாட்டின் ஒற்றுமைக்கும் ஐக்கியத்திற்கும் பங்கம் ஏற்படுவதோடு இனங்களுக்கிடையே கசப்புணர்வும் அமைதியின்மை... புரிந்துணர்வு, நல்லுறவு ஆகியவற்றின் காரணமாகத் தான் ஐ. தே. கவிற்கு ஆதரவளித்து அதை வெற்றிபெறச் செய்தோம்.

சிறிலங்காவில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்பவர்கள் பெரும்பான்மை இன மக்களுக்கு மாத்திரமல்ல, சிறுபான்மையின மக்களுக்கும் ஜனாதிபதியாகும். பல்லின மக்கள் வாழும் ஜனநாயக நாட்டில் அனைத்து இன மக்களையும் அரவணைத்து செல்வதன் மூலம்மட்டுமே நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப் பாட்டையும் பொரு

# பிறந்த தின வாழ்த்து



செல்வன் **கிருஷாந்**     செல்வன் **பிரஷாந்**

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த இராசசேகரம் (பச்சி) யோகராணி தம்பதிகளின் புத்திரர்கள் இ. கிருஷாந் நான்காவது பிறந்தநாளையும் செல்வன் இ. பிரஷாந் மூன்றாவது பிறந்தநாளையும் இன்று (26.02.94) கரவெட்டியிலுள்ள தமது இல்லத்தில் மிகச்சிறப்பாக கொண்டாடுகின்றனர். இவர்களை அப்பா, அம்மா, பேரன்மார், பேர்த்திமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், அக்காமார், அண்ணாமார், அண்ணிமார், சித்தப்பாமார், சித்திமார், சட்டநாதர் கோவிலைச் சேர்ந்த சறோஜா அத்தை குடும்பத்தினர், கோப்பாயைச் சேர்ந்த மாமா, அத்தை, மச்சாள்மார், மச்சான்மார், அரசடியைச் சேர்ந்த ராதா அத்தை குடும்பத்தினர், பிரான்சில் வசிக்கும் கோபால் மாமா, ராஜாமாமா, குட்டிமாமா, பெரியப்பா ஆகியோர் சகல கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் சிறப்புற வாழ வேண்டுமென வாழ்த்துகின்றனர்.

-குடும்பத்தினர்

(7605)

## இலவச வகுப்புகள்

(தொல்புரம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும் சிறுப்பிட்டி குமுதன் கல்வி வளர்ச்சிக் கழகத்தில் இலவச கல்வி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்று வரும் மேற்படி இலவச கல்வி வகுப்புகளில் பல வேளை ஆண்டு 1 முதல் ஆண்டு 10 வரையிலான வகுப்பு மாணவர்க்கு சிறந்த முறையில் கல்வி போதிக்கப்படுகின்றன. (41)

## ஒன்பதாயிரம் அபராதம்

அனுமதியின்றி மரம் வெட்டியமைக்காவும், ஏற்றி வந்தமைக்காகவும் ஏழாலையைச் சேர்ந்த இருவருக்கு சுன்னாகம் நீதிமன்றினால் அபராதம் விதிக்கப்பட்டது. அனுமதியின்றி மரங்களை வெட்டியமைக்காக ஏழாலையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிவகுரு என்பவருக்கு மூவாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் மரங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

ஆறாயிரம் ரூபா பெறுமதியான மரங்களை அனுமதிப் பத்திரமின்றி ஏற்றி வந்தமைக்காக ஏழாலை மேற்கைச் சேர்ந்த இராமலிங்கம் கருணாநிதி என்பவருக்கு ஒன்பதினாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது (09).(11)

(நமது நிருபர்)

கிளிநொச்சி மருத்துவமனைக்கான இவ்வாண்டுக்குரிய முதலாம் தவணை மருந்துகள் இதுவரை வந்துசேரவில்லை என தெரியவருகின்றது

இம் மருத்துவமனைக்கான மருந்துப்பொருள்களை கொழும்பிலிருந்து எடுப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடிய போது தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகன அணி கொழும்பிலிருந்து தரைவழியாக பொருள்களை எடுத்துவருவதை நிறுத்தியுள்ளதால் அம்முயற்சியும் கைகூடவில்லையென தகவல்கள் தெரிவிக்கின்றன (சி)

# பார்வை குறைந்தவர்க்கு மூக்குக்கண்ணாடி

(யாழ்ப்பாணம்)

கண் பார்வை குறைந்த மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்க யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் கோட்டக் கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. 1994ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டிலிருந்து இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

கண் பார்வை குறைந்த இலவச மூக்குக் கண்ணாடி தேவைப்படும் மாணவர்களின்பெயர்ப்பட்டியலையும், கண் வைத்திய நிபுணரால் பரிசோதித்து வழங்கப்பட்ட அறிக்கையையும், அதன் நிழற்படப் பிரதியையும் உடன் அனுப்பி வைக்கும்படி நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

# மீனவப்படகுகள் சிக்க கடற்படையினர் 'வலை'

(மானிப்பாய்)

மீனவர் படகுகளை தடுத்து தாக்குதல்களை மேற்கொள்வதற்கு வசதியாக அராலிக் கடலின் ஆழப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் 'டிஸ்கோ' வலைகளை போட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அராலி கடற்பரப்பில் இராணுவத்தினர் இவ்வாறான வலைகளை போட்டுள்ளனர். இதனால் நடுக்கடலினுள் பிரயாணம் செய்யும் படகுகளின்வெளி இணைப்பு இயந்திரங்களில் இவ் வலைகள் சுற்றுகின்றன. இதனால் இவற்றின் இயக்கம் ஸ்தம்பிதம் அடையும். இச் சந்தர்ப்பத்தில் இராணுவத்தினர் அப்படகுகள்மீது இலகுவாக துப்பாக்கி மற்றும் பீரங்கி தாக்குதல்களை நடாத்த திட்டமிட்டுள்ளனர் எனத் தம்பாட்டி கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாட்டினால் இப்பகுதி மீனவர்களின் தொழில்களும் பாதிப்படைந்துள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது, சிறிய துவாரங்களைக் கொண்ட இவ்வலையினைக் கடந்து மீனினங்கள் கரையை நோக்கி வருவது தடைப்பட்டுள்ளது. இதனால் இவர்களால் பிடிக்கப்படும் மீன்களின் அளவும் மிகக் குறைவாகவேயுள்ளது; (07)


## மதுரா பட்டு மகால்

❋ ஆதரவாளர்களின் ஆவல் அறிந்தசேவை!
❋ மங்கள வைபவங்களுக்கான பட்டுப் புடவைகள்!!
❋ இறக்குமதி செய்யப்பட்ட ஆடைத் தினுசுகள்!!!

மதுராவின் வாடிக்கையாளர் பரிசுத்திட்டம்,

1-ம் பரிசு தங்கப் பதக்கம்
2-ம் பரிசு ரூபா 5000 –
3-ம் பரிசு ரூபா 2500/–
பல ஆறுதல் பரிசில்கள்

மதுரா ஆதரவாளர்களின் சிட்டை இலக்கங்கள் அனைத்தும் பரிசுத்திட்டக் குலுக்கலில் 1994 சித்திரையில் சேர்த்துக் கொள்ளப்பட விருப்பதால் சிட்டைகளைப் பத்திரப்படுத்துங்கள்.

நன்றி;

(சி-8697)    75, பெரியகடை யாழ்ப்பாணம்.


## ஆங்கிலக் கருத்தரங்கு

மருதங்கேணி கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய கல்விக் கோட்டங்களில் ஆண்டு 7 தொடக்கம் ஆண்டு 11 வரை ஆங்கிலம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்கான சேவைக்கான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் காலை 8. 30 மணி தொடக்கம் 4. 30 மணிவரை நடைபெறும்

கலந்துகொள்ள உள்ளனர். இம்மாநாட்டுக்கென புதிய கலையரங்கம் ஒன்றை அமைப்பதற்கும் தமிழ்நாட்டு முதல ஒன்றை நடத்துவதெனவும் விழாவின் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

# பாகிஸ்தான் முயற்சி தோல்வியிலேயே முடியும்

### இந்திய தரப்பு நம்பிக்கை

(டில்லி)

காஷ்மீர் மாநிலத்தில் மனித உரிமைகள் மீறப்படுவதாக ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவில் தீர்மானம் நிறைவேற்ற பாகிஸ்தான் எடுக்கும் முயற்சிகள் தோல்வியிலேயே முடிவடையும்என்று எதிர்பார்ப்பதாக புதுடில்லியில் கூறப்பட்டுள்ளது.

ஜெனிவாவிலிருந்து கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் ஐம்பத்து மூன்று நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்ட ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவில் ஓர் அங்கத்தவரினதும் ஆதரவைப் பெற பாகிஸ்தானினால் முடியவில்லை என்றும், பாகிஸ்தான் இது விடயத்தில் தனித்து விடப்படும் சூழ்நிலை உருவாகி இருப்பதாகவும் மேலும் தெரியவந்துள்ளது

# பாக். தூதுவராலயம் ஆப்கானில் சூறை

(டில்லி)

பாகிஸ்தான்இஸ்லாமாபாத்திலுள்ள ஆப்கானிஸ்தான் தூதரகத்தில் 3 கடத்தல்காரர்களை துப்பாக்கி நபர்கள் சுட்டுக் கொன்றதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தை நேற்று ஆர்ப்பாட்டக்காரர்கள் சூறையாடினார்கள்.

ஆப்கானிஸ்தானில் நடைபெறும் சண்டையை முடிவுக்குக் கொடுவர பல்வேறு குழுத்தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் காபூல்போய் சேர்ந்த உடனேயே இந்தத் தாக்குதல் நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# காஷ்மீர் பிரச்சினைக்கு பாகிஸ்தானே தூண்டுதல்

### வாஜ்பாய் தெரிவிப்பு

(டில்லி)

காஷ்மீரில் இருப்பது மனித உரிமைப் பிரச்சினையல்ல; பாகிஸ்தான் ஆதரவிலான பயங்கர வாதமேயாகும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரும், முன்னாள் வெளியுறவு அமைச்சருமான அடல் பிஹாரிவாஜ்பாய் கூறியுள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், காஷ்மீர் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றும் முயற்சியில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளது. இந்த விடயத்தில் எந்த நாடும் ஒருநாளும்நடுவு நிலைமை வகிக்கக் கூடாது பாகிஸ்தான் முயற்சிக்கு எதிராக வாக்களிப்பதன் மூலம் அதன் ஆதரவின் கீழான பயங்கரவாதத்தை எதிர்க்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# உள் விவகாரத்தில் தலையிட்டால் எதிர்ப்பு

### இந்திய பாராளுமன்றம் தீர்மானம்

(டில்லி)

இந்தியாவின் உள்விவகாரத்தில் குறுக்கிடுவதற்கு முயலுவோர் எவராய் இருந்தாலும் அந்த முயற்சி திட்டவட்டமாக எதிர்க்கப்படும் என்று இந்திய பாராளுமன்றம் கடந்தசெவ்வாய்க்கிழமைஒருமனதாக இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக இந்திய வானொலி செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி தீர்மானத்தை ஜெனிவாவில் கூடியுள்ள ஐ. நா. மனித உரிமைகள் கமிசனின் உறுப்பினர்கள் கவனத்தில் எடுத்துள்ளதாகவும் மேற்படி தீர்மானத்தை ஐ. நா. பத்திரிகைகள் அலுவலகத்தில் இந்தியப் பிரதிநிதிகள் விநியோகித்துள்ளதாகவும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

வெல்ல இயலும் என நம்புவோர் வெல்வர்.

-வெர்ஜில்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-02-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

## தொடரும் நல்லெண்ண சமிக்கைகள்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான நல்லெண்ணச்சமிக்கைகளைவிடுதலைப்புலிகள் இயக்கம் தொடர்ந்தும் வெளிக்காட்டிய வண்ணமேஉள்ளது; இறுதியாக நேற்று முன்தினமும் கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு அதிமேற்றிராணியார் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இரு போர்க் கைதிகளை தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் விடுதலை செய்துள்ளார்.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் சகலரின் முயற்சிகளையும் விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்ச்சியாக வரவேற்று வந்துள்ளமையையே கடந்த கால நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. சமாதான முயற்சியில் ஈடுபட்டு வடக்கிற்கு வந்த சகல தரப்பினரும் விடுதலைப் புலிகளினால் வரவேற்கப்பட்டதோடு அவர்களின் மனிதாபிமான ரீதியான கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளதோடு, சமரச முயற்சிகளைத் தோற்றுவிப்பதற்கான வகையில் கணிசமான ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளனர்.

1992இல், அமரபுர நிக்காயாவைச் சேர்ந்த பௌத்த குருமார்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது அவர்களை வரவேற்று பேச்சுக்கள் நடத்தியதோடு, போர்க் கைதிகளைப் பார்வையிடவும், பேச்சுக்கள் நடத்தவும் அனுமதித்திருந்தனர். ஆனால், இப்பௌத்த குருமார்கள் தென்னிலங்கைக்குத் திரும்பியபோது அரசாங்கம் அவர்களை வரவேற்கவும் இல்லை, சமரச முயற்சிகள் பற்றி அக்கறை காட்டவும் இல்லை.

அதன் பின்னர், கடந்த ஆண்டு அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ வந்தபோது தலைவர் பிரபாகரன் அவரைச் சந்தித்து உரையாடியதோடு, அவரின் கோரிக்கைக்கு இணங்கி இரு போர்க்கைதிகளை விடுதலை செய்து நல்லெண்ணச் சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதற்கான முன் முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், அங்கிலிக்கன் ஆயரின் முயற்சிக்கும் அரச தரப்பினரிடம் இருந்து நல்ல சமிக்கைகள் கிடைக்கவில்லை.

அதன் பின்னர், கடந்த ஆண்டு ...

# போரும் சமாதானமும்

அன்ரன் பாலசிங்கம்

நீண்ட காலமாகவே தமிழீழத்தின் சமாதானக் கதவுகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. சமாதானத் தூதுவர்கள் எவராக இருப்பினும் எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் இங்கு வந்து செல்ல வாய்ப்பளிக்கும் வகையில் அமைதியின் பாதையை அகலத் திறந்து விட்டிருக்கிறார் தலைவர் பிரபாகரன்.

இந்தச் சமாதானக் கதவுகளூடாக பலர் பல தடவைகள் இங்கு வந்து சென்றிருக்கின்றார்கள்; புலிகளின் சமாதானச் செய்தியைத் தென்னிலங்கைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். ஆனால் சிங்கள தேசம் இதுவரை சமாதானத்தின் கதவுகளைத் திறந்து விட மறுத்து வருகிறது; சண்டையை நிறுத்தி, சமாதானச் சூழ்நிலையை உருவாக்கப் பின்னடித்து வருகிறது.

புலிகளின் சமாதானக் கதவுகளூடாக முதன் முதலாக நுழைந்தது நோர்வே அரசாங்கமாகும். 1990 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில், நோர்வே வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த ஓர் உயர் அதிகாரி யாழ்ப்பாணம் வந்தார்; எம்முடன் பேச்சுக்களை நடத்தினார்; சர்வதேச சமூகம் சமாதானப் பேச்சுக்களை விரும்புவதாகக் கூறினார்; நோர்வே மத்தியத்துவம் வகிக்க விரும்புகிறது; நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் பேச்சுக்களை ஒழுங்கு செய்யலாம்; சமாதானப் பேச்சுக்களுக்கு முதற்படியாக இரு தரப்பினரும் போர் நிறுத்தம் செய்யவேண்டும் என வலியுறுத்தினார். நாம் அதற்கு இணக்கம் தெரிவித்தோம். ''உண்மையில் நீங்கள் சமாதானத்தை விரும்புவதாக உலகத்திற்கு நிரூபித்துக் காட்ட வேண்டும் என்றால், நீங்கள்தான் முதலில் போர்நிறுத்தம் செய்ய வேண்டும். ஒரு தலைப்பட்சமாகப் பிரகடனப்படுத்த வேண்டும். நீங்கள் அப்படிச் செய்தால், சிறிலங்கா அரசு மீது நாம் அழுத்தத்தைப் பிரயோகித்து அவர்களையும் போர்நிறுத்தத்திற்கு இணங்க வைக்கலாம்'' என்றார். நாம் அதற்கும் இணக்கம் தெரிவித்தோம்.

1991 ஆம் ஆண்டு ஜனவரி ...

சமாதானக் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்தது. இக்குழுவிற்கு அமரபுர பௌத்த பீடத்தைச் சேர்ந்த வண. சித்தாதிய மகா நாயக்க தேரர் தலைமை வகித்தார். இவர்கள் புலிகளின் பாதுகாப்புடன் யாழ் குடாநாடு முழுவதும் சுற்றிப் பார்த்தனர். தமிழ்மக்களின் அபிலாசைகளைக் கேட்டறிந்தனர். யுத்த அனர்த்தங்களைக் கண்டறிந்தனர். மக்களின் அவலநிலை கண்டு அதிர்ந்து போன இவர்கள், போருக்கு முடிவுகட்டி சமாதானச் சூழலை உருவாக்கத் தம்மாலான முயற்சி செய்வோம் என வாக்குறுதிகள் அளித்தனர். இந்தப் பௌத்த சமாதானக் குழுவினர் சில யோசனைகள் அடங்கிய திட்டத்தோடு வந்திருந்தனர். இத்திட்டத்தில் தமிழர் தாயகக் கோட்பாடு நிராகரிக்கப்பட்டிருந்தது. நாம் இவர்களைச் சந்தித்துப் பேசினோம். எந்தத் தீர்வுக்கும் 'தமிழர் தாயகம்' அடிப்படையானது என வலியுறுத்தினோம். பேச்சுக்களுக்குச் சமாதானச் சூழ்நிலை உருவாக்கப்படுவது அவசியம் எனவும் எடுத்துரைத்தோம். சிங்கள அரசியல் தலைமையுடன் பேச்சுக்களை நடத்தி, சமாதானச் சூழலை உருவாக்குவோம்; புதிய தீர்வுத் திட்டத்துடன் மீண்டும் யாழ்ப்பாணம் வருவோம், என்றுசொன்னார்கள். ஆனால் போனவர்கள் வரவில்லை. கொழும்பு திரும்பிய இவர்களை ஆட்சி பீடத்திலிருந்த சிங்களத் தலைவர்கள் எவரும் சந்திக்க விரும்பவில்லை. இதனால் இவர்களது சமாதான முயற்சி பிசுபிசுத்துப் போனது.

இந்த நிகழ்வுகளுக்கு அப்புறமும் சமாதானக் கதவுகளைப் புலிகள் சாத்திவிடவில்லை.

அடுத்ததாக, சென்ற ஆண்டு முற்பகுதியில் அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் வந்தார். சமாதானத்தின் பருவகாலம் வந்துவிட்டது ...

செய்து என்னிடம் ஒப்படைப்பீர்களா?'' என்று கேட்டார் ஆயர். எவ்வித தயக்கமுமின்றிதலைவர் பிரபாகரன் அதற்கு இணங்கினார். ஆச்சரியத்தால் ஆயரின் முகம் மலர்ந்தது.

போருக்குஒருமுடிவு கொண்டுவர முயற்சிப்பேன். பொருளாதாரத் தடையால் தமிழ் மக்கள் படும் தாங்கொணாத் துயரைத் தென்னிலங்கையில் எடுத்து விளக்குவேன். சமாதான சூழலை உருவாக்கும்படி அரசிடம் வற்புறுத்துவேன். இவ்விதம் வாக்குறுதி அளித்தார் ஆயர்.

தலைவர் பிரபாகரனின் நேர்மைக்கு அறிகுறியாகவும் புலிகளின் சமாதானத் தேடலுக்கு சாட்சியாகவும் விடுதலை பெற்ற இரு போர்க் கைதிகளை அழைத்துக் கொண்டு ஆயர் கெனத் பெர்னாண்டோ கொழும்பு திரும்பினார். கொழும்பில் பத்திரிகையாளரிடம் பேசும் பொழுது, ''பிரபாகரனிடம் மனிதத்தின் முகத்தைக் கண்டேன்'' என்று கூறினார். அவ்வளவுதான், சிங்களப் பேரினவாதம் கொதித்து எழுந்தது; ஆயர் மீதும் புலிகள் மீதும் சேற்றை வாரி வீசியது.

''ஆயருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. அதனால்தான் பிரபாகரனை மனிதனாகக் கண்டார்'' என ஒரு பத்திரிகை எழுதியது.

ஆயர் எவ்வளவோ முயற்சித்தும், அன்றைய ஜனாதிபதி பிரேமதாசா அவரைச் சந்திக்க மறுத்துவிட்டார்.

சிங்களப் பேரினவாதம் சமாதானத்தை விரும்பாததால், மீண்டும் ஓராண்டு யுத்தத்தில் கழிந்தது. என்றுமில்லாதவாறு இராணுவத்திற்கு 'அடிமேல் அடிவிழுந்தது. பூநகரியில் பேரடி விழுந்தது.' அடிமேல் அடி விழுந்தால் அம்மியும் நகரும், என்பார்கள் ஆனால் சிங்களப் பேரினவாத அம்மி சிறிதேனும் நகரவில்லை.

தயார். இவ்வாறு நாம் எமது நிலைப்பாட்டை எடுத்து விளக்கினோம். எமது யோசனையில் நியாயம் இருப்பதை ஆயர்களும் உணர்ந்துகொண்டனர்.

அங்கிலிக்கன் ஆயர், தலைவர் பிரபாகரனை மீண்டும்சந்திக்கவிருப்பம் தெரிவித்தார்;

ஆனால்வற்புறுத்தவில்லை. ஏற்கனவே ஒரு தடவைதலைவரைச் சந்தித்தாகிவிட்டது. நேரில் வந்து, நேசக்கரம் நீட்டி, சமாதானத்திற்கு சமிக்ஞையும் காட்டியிருக்கிறார் தலைவர். அப்படியிருந்தும் சிங்கள தேசம்தான் சமாதானக் கதவுகளை இறுகப் பூட்டி வைத்திருக்கிறது. இந்த சூழ்நிலையில் மீண்டும் மீண்டும் சந்தித்து, மீண்டும் மீண்டும் சொன்னதையே சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை கொழும்பிலுள்ள அரசியல் செவிடர்களுக்கு இங்கிருந்து எத்தனை தடவைகள் சங்கை ஊதினாற் போலும் கேட்கவா போகிறது? ஆயர் விசயமறிந்தவர். அதனால் அவர் மீண்டும் சந்திப்பை வற்புறுத்தவில்லை.

ஆயர்கள் இங்கு வந்தபோது சர்வோதயத் தலைவர் ஆரியரத்தினாவும் இங்கு வந்தார். அவரைப் புலிகளின் சார்பில் அரசியல் துணைப் பொறுப்பாளர் கரிகாலன் சந்தித்தார், ஆயருக்குச் சொல்லப்பட்டதே அவருக்கும் சொல்லப்பட்டது

வந்தவர்கள் திரும்பிவிட்டார்கள் அவர்கள் எதையுமேபுதிதாகக் கொண்டு வரவில்லை; எதையுமேபுதிதாகக்கொண்டு செல்லவுமில்லை. தமிழ்மக்கள் சமாதானத்தைவிரும்புகிறார்கள்; புலிகளும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். இந்தப் பழைய செய்தியைத்தான் கொண்டு சென்றிருக்கிறார்கள் இதைத் தான் கொழும்பிலும் சொல்லப் போகிறார்கள். கொழும்பிலும் புதிதாக எவ்வித திருப்பமும் ஏற்படப் போவதில்லை.

போரை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் விரும்பவில்லை; பொருளாதார நெருக்குதலைத் தளர்த்தவும் விரும்பவில்லை- ...

சூழலில் இராணுவ சமபலம் புலிகளுக்குச் சார்பாக இருக்கிறது- இந்த நிலைமையில் போரை நிறுத்திக் கொள்வது புலிகளுக்கே அனுகூலமாக அமையும் என அரசு அஞ்சுகிறது- பலத்தின் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு, ஆதிக்க வலிமையுடன் - அதிகார தோரணையில்-பேசுவதையே அரசு விரும்புகிறது- அதற்கு இன்னும் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சரியாகவரவில்லை- அதற்கு வெற்றிகள் வேண்டும்; போர்ச் சாதனைகள் புரிய வேண்டும்; ஆக்கிரமிப்பு வேலைகளைச் செய்ய வேண்டும்: புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்த வேண்டும்- இதை எல்லாம் செய்துகாட்டலாம் என இராணுவத் தலைமை நம்புகிறது; அதற்கான தயாரிப்புகளையும் செய்கிறது- ஆகவே, போருக்கு ஓய்வு கொடுப்பதை இராணுவம் விரும்பவில்லை- போரைத் தொடர்வதில் தேர்தல் அனுகூலங்கள் இருப்பதாகவும் அரசு நினைக்கிறது தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணாது தட்டிக்கழிக்கலாம். 'தமிழரின் பயங்கரவாதம்' என்ற கோஷத்தின் கீழ் சிங்களவரின் தேசியவாதத்தில் குளிர்காயலாம்; பேரினவாத சக்திகளைத் தனக்குச் சார்பாக அணிதிரட்டிக் கொள்ளலாம்; சமூக, பொருளாதார பிரச்சினைகளையும் திசைதிருப்பிவிடலாம்- இதனால் போரைத் தொடர அரசு விரும்புகிறது

படைகளுக்கு ஏற்பட்டு வரும் பேரிழப்புகள் காரணமாக, யுத்தத்திற்கு எதிரான குரல் ஒன்றும் தென்னிலங்கையில் எழுகிறது- இது பாமர மக்கள் மட்டத்திலிருந்து எழும் அங்கலாய்ப்பு; பணத்திற்காக பிள்ளைகளைஇராணுவத்திற்கு அனுப்பி, பிணத்தைக்கூடப் பார்க்க முடியாத பெற்றோரின் அவலக் குரல்- இது மெல்ல மெல்லப் பலம் பெற்று வருகிறது- அத்துடன் உதவி வழங்கும் உலக நாடுகளும் ஓரளவு அழுத்தம் போடுகின்றன. புலிகளை வெல்ல முடியாதஒரு போரில் பெருந்தொகைப் பணம் விரயமாகிறது- யுத்தமும் முடிவில்லாத கதையாகத் தொடர்கிறது- அரசின் வலுவுக்கு இது அச்சுறுத்தலாக அமைகிறது- இலங்கையில் பெரு ...

உழைப்பையும் வழங்கியுள்ளனர்.

1992இல், அமரபுர நிக்காயாவைச் சேர்ந்த பௌத்த குருமார்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது அவர்களை வரவேற்று பேச்சுக்கள் நடத்தியதோடு, போர்க் கைதிகளைப் பார்வையிடவும், பேச்சுக்கள் நடத்தவும் அனுமதித்திருந்தனர். ஆனால், இப்பௌத்த குருமார்கள் தென்னிலங்கைக்குத் திரும்பியபோது அரசாங்கம் அவர்களை வரவேற்கவும் இல்லை, சமரச முயற்சிகள் பற்றி அக்கறை காட்டவும் இல்லை.

அதன் பின்னர், கடந்த ஆண்டு அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ வந்தபோது தலைவர் பிரபாகரன் அவரைச் சந்தித்து உரையாடியதோடு, அவரின் கோரிக்கைக்கு இணங்கி இரு போர்க்கைதிகளை விடுதலை செய்து நல்லெண்ணச் சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதற்கான முன் முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், அங்கிலிக்கன் ஆயரின் முயற்சிக்கும் அரச தரப்பினரிடம் இருந்து நல்ல சமிக்கைகள் கிடைக்கவில்லை.

அதன் பின்னர், கடந்த ஆண்டு யுத்தக் கைதிகள் உண்ணாவிரதம் இருந்தபோது அரசாங்கத்துடன் ஏற்பட்ட பேச்சுக்களைத் தொடர்ந்து நல்லெண்ண முயற்சியாக ஐந்து போர்க் கைதிகள் விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்டபோதும், அரசாங்கம் உடன்பாட்டை முறித்துக் கொண்டது. உருவாகி வந்த சமாதானச் சூழ்நிலையைக் கெடுத்தது.

ஆனால், அதன் பின்னரும் இரண்டு போர்க் கைதிகள் விடுதலைப் புலிகளால் மனிதாபிமான ரீதியாக விடுதலை செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து தற்பொழுது, கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு அதிமேற்றிராணியாரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் இரு போர்க் கைதிகளை விடுதலைப் புலிகள் விடுதலை செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாகச் செய்துவரும் இந் நல்லெண்ணச் சமிக்கையானது, பலவீனத்தின் அடிப்படையானதல்ல. விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகப் பலவீனப்பட்டுள்ள நிலையிலேயே சமரச முயற்சியில் ஈடுபடுகின்றனர் என ஆரம்பத்தில் தெரிவித்து வந்த சிறிலங்கா அரசாங்கம் ஒப்பரேசன் யாழ்தேவி, பூநகரி முகாம் தகர்ப்பு ஆகிய தோல்விகளின் பின்னர் அவ்வாறு கூறவும் முடியாத நிலை உள்ளது.

இருப்பினும், அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண விரும்பவில்லை என்பதே யதார்த்த நிலையாகும். இதனை இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்தின் ஜனாதிபதி ஒரு பேச்சும் பிரதமர் ஒரு பேச்சும் பேசிக் கொண்டிருப்பதில் இருந்தே புரிந்து கொள்ள முடியும். அத்தோடு, இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகளும் இவற்றை வெளிக்காட்டுபவையாகவுள்ளன.

இந்நிலையில், அரசாங்கத்தின் இந்நிலைப்பாட்டை இச்சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் உலகிற்கு வெளிக் கொண்டுவர வேண்டும். இது இவர்களினால் சாத்தியப்படக் கூடியதும் ஆகும். இக்குழுக்களின் சமாதான முயற்சிகள் வெற்றி பெற விடுதலைப் புலிகள் வழங்கிய ஒத்துழைப்பை வெளியிடுவதன் மூலம், சிறிலங்கா அரசாங்கம் சமாதான முயற்சிகளில் எத்துணை தூரம் அசட்டையாக இருக்கின்றதென்பது தெரியவரும். அவ்வாறு இல்லாதுவிடில் விடுதலைப் புலிகள் சமாதான நல்லெண்ணத் தூதுக்குழுவினரை வரவேற்றது மட்டுமல்லாது, சுமூகமான சூழ்நிலை உருவாக்க அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு இக்குழுக்கள் தமது நல்லெண்ணத்தைக் காட்டத் தவறிவிட்டதாகவே பொருள்படும்.

ஒழுங்கு செய்யலாம்; சமாதானப் பேச்சுக்களுக்கு முதற்படியாக இரு தரப்பினரும் போர் நிறுத்தம் செய்யவேண்டும் என வலியுறுத்தினார். நாம் அதற்கு இணக்கம் தெரிவித்தோம். ''உண்மையில் நீங்கள் சமாதானத்தை விரும்புவதாக உலகத்திற்கு நிரூபித்துக் காட்ட வேண்டும் என்றால், நீங்கள்தான் முதலில் போர்நிறுத்தம் செய்ய வேண்டும். ஒரு தலைப்பட்சமாகப் பிரகடனப்படுத்த வேண்டும். நீங்கள் அப்படிச் செய்தால், சிறிலங்கா அரசு மீது நாம் அழுத்தத்தைப் பிரயோகித்து அவர்களையும் போர்நிறுத்தத்திற்கு இணங்க வைக்கலாம்'' என்றார். நாம் அதற்கும் இணக்கம் தெரிவித்தோம்.

1991 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து போர் நிறுத்தம் கடைப்பிடிப்பதாக, விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருதலைப்பட்சமாக அறிவித்தது. ஆனால் சிங்கள அரசு போர் நிறுத்தத்தை நிராகரித்தது; யுத்தத்தை மேலும் தீவிரமாகத் தொடர்ந்தது. ஒன்றும் தெரியாதது போல நோர்வே அரசாங்கம் மௌனம் சாதித்தது. அந்த ஆண்டு மேற்குலகம் அதிகப்படியான உதவியை சிறிலங்காவுக்கு வாரி வழங்கியது.

அடுத்ததாக, புலிகளின் சமாதானக் கதவுகளூடாகக் குவேக்கர்ஸ் நல்லெண்ணக் குழு பிரவேசித்தது பல தடவைகள் வந்து சென்றது. பிரிட்டனின் ஆசியுடன் லண்டனில் பேச்சுக்களை நடத்தலாம் என்று சொன்னது. கிட்டுவுடன் சேர்ந்து ஒரு விரிவான சமாதானத் திட்டத்தைத் தயாரிப்பதாகக் கூறியது உபகண்டம் ஊடாகப் போக்குவரத்துச் செய்ய இந்தியாவும் இணங்குவதாகத் தெரிவித்தது. எல்லா வகையிலும் ஒத்துழைப்பு வழங்க நாமும் ஒப்புதல் கொடுத்தோம். இறுதியில் என்ன நடந்தது? 'குவேக்கர்ஸின்' சமாதான முயற்சி, முடிவில் கிட்டுவின் உயிரை அநியாயமாகப் பலிகொண்டது. இந்தத் துயரமான கதைபற்றி நாம் ஏற்கனவே விளக்கியிருக்கிறோம். வங்கக் கடலில் வைத்துப் புலிகளின் சமாதானப் படகு இந்தியாவால் மூழ்கடிக்கப்பட்டபோது, பிரிட்டனோ அல்லது மேற்குலகமோ வாய் திறக்கவில்லை- சமாதானத் தூதுவனாகவே கிட்டு தமிழீழம் நோக்கிப் பயணம் செய்தார் என குவேக்கர்ஸ் நிறுவனம் வெளியிட்ட ஆட்சேப அறிக்கையையும் உலகம் இருட்டடிப்புச் செய்தது-

இது ஒருபுறமிருக்க, 1992-ம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் திகதி பௌத்த பிக்குகள் அடங்கிய

வோம்; புதிய தீர்வுத் திட்டத்துடன் மீண்டும் யாழ்ப்பாணம் வருவோம், என்றுசொன்னார்கள்- ஆனால் போனவர்கள் வரவில்லை- கொழும்பு திரும்பிய இவர்களை ஆட்சி பீடத்திலிருந்த சிங்களத் தலைவர்கள் எவரும் சந்திக்க விரும்பவில்லை. இதனால் இவர்களது சமாதான முயற்சி பிசுபிசுத்துப் போனது-

இந்த நிகழ்வுகளுக்கு அப்புறமும் சமாதானக் கதவுகளைப் புலிகள் சாத்திவிடவில்லை-

அடுத்ததாக, சென்ற ஆண்டு முற்பகுதியில் அங்கிளிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் வந்தார். சமாதானத்தின் பருவகாலம் வந்துவிட்டது என்றார்-புலிகளின்தலைவரை நேரில் சந்திக்க வேண்டும்; அவரது வாயால், அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்டறியவே சிங்கள தேசம் விரும்புகிறது; ஏனையோரைச் சந்திப்பதில் அர்த்தமுமில்லை, அவசியமும் இல்லை என்றார்- ஆயரின் அபிலாசையையும், வற்புறுத்தலையும் நாம் தலைவரிடம் எடுத்துரைத்தோம். ஆயரைச் சந்திக்க தலைவர் இசைந்தார்- 1993 ஜனவரி 10ஆம் திகதி சந்திப்பு நிகழ்ந்தது- இரண்டரை மணி நேரமாக தலைவர் பிரபாகரன் ஆயருடன் கலந்துரையாடல் நிகழ்த்தினார்; எல்லா விடயங்கள் பற்றியும் மனம் திறந்து பேசினார்-

தமிழீழம் சமாதானத்தை வரவேற்கிறது அமைதி வழியில் பிரச்சினையைத் தீர்க்க நாம் தயார் சிங்கள தேசத்திற்கு நாம் நேசக்கரம் நீட்டி நிற்கிறோம் ஆனல் அதைப் பற்றிக் கொள்ள சிங்கள அரசு மறுக்கிறது. சண்டையை நிறுத்தி, பொருளாதாரத் தடைகளை நீக்கி சகஜ நிலையைத் தோற்றுவித்தல் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் இப்படிச் சொன்னார் தலைவர்.

தமிழர் தாயகத்தைத் துண்டாடிவிடும் சிங்கள அரசின் முயற்சியையும் தலைவர் கண்டித்தார். தமிழர் தாயகம் என்பது எமது அடிப்படையானகோரிக்கை- அதனைசிங்கள தேசம் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் தமிழரின் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணமுடியாது என்பதனையும், தலைவர் ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

''நீங்கள் உண்மையில் சமாதானத்தைவிரும்புவதாக இருந்தால், உங்கள் நல்லெண்ணத்திற்குச் சான்றாக இரு போர்க்கைதிகளை விடுதலை

''ஆயருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது- அதனால்தான் பிரபாகரனை மனிதனாகக் கண்டார்'' என ஒரு பத்திரிகை எழுதியது.

ஆயர் எவ்வளவோ முயற்சித்தும், அன்றைய ஜனாதிபதி பிரேமதாசா அவரைச் சந்திக்க மறுத்துவிட்டார்-

சிங்களப் பேரினவாதம் சமாதானத்தை விரும்பாததால், மீண்டும் ஓராண்டு யுத்தத்தில் கழிந்தது. என்றுமில்லாதவாறு இராணுவத்திற்கு 'அடிமேல் அடிவிழுந்தது. பூநகரியில் பேரடி விழுந்தது.' அடிமேல் அடி விழுந்தால் அம்மியும் நகரும், என்பார்கள் ஆனால் சிங்களப் பேரினவாத அம்மி சிறிதேனும் நகரவில்லை.

வழமைபோல, வருட ஆரம்பத்தில் சமாதானப் பருவகாலம் பிறந்ததைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்தை நோக்கிய ஆன்மீக யாத்திரைகளும்- தொடங்கின. இம்முறை கிறீஸ்தவத்தின் மூன்று முக்கிய மதபீடத் தலைமைகளும் இங்கு வந்து, நிலைமையைக் கண்டறிந்து சென்றன- இவர்களைத் தொடர்ந்து, பௌத்த மகா சங்கத்தின் பிக்குகள் குழு ஒன்றும் யுத்தத்தால் சிதைந்த யாழ்ப்பாணத்தின் முகத்தைத் தரிசித்துச் செல்ல இருக்கிறது.

கத்தோலிக்க, மெதடிஸ்த, அங்கிளிக்கன் திருச்சபைத் தலைவர்களை நாம் சந்தித்து எமது நிலைப்பாட்டை விளக்கினோம்-

சமாதானப் பேச்சுக்கள் சமாதான சூழ்நிலையில் நிகழ்வது தான் நியாயம். அப்பொழுதுதான் அது வலுக்கட்டாயமற்ற, சுதந்திரமான பேச்சாகஅமையும் இராணுவ, பொருளாதார அழுத்தங்களைப் போட்டவாறு, தமிழரின் தொண்டையை நெரித்துக்கொண்டு பேசச் சொல்வது நியாயம் ஆகாது- நெருக்குவாரத்தின் பிடிக்குள் நின்றுகொண்டு,நட்புறவுடன், நல்லெண்ணத்துடன், நம்பிக்கையுடன் பேச முடியாது- எனவே, அழுத்தம்போட்டு, மிரட்டிப் பயமுறுத்தி, தமிழர் மீது ஏதோ தீர்வு ஒன்றைத் திணித்துவிடலாம் என்று அரசு எண்ணுவது அடிப்படையிலேயே தவறானது. முதற்படியாக சமாதான சூழ்நிலை உருவாகவேண்டும்- இதற்கு போர் நிறுத்தம் அவசியம்; பொருளாதார நெருக்குதல் நீக்கப்படுவது அவசியம். தமிழர்மீது தனது நல்லெண்ணத்தைக் காண்பிக்கும் வகையில் அரசு இவற்றைச் செய்யலாம் இப்படியாக ஒரு சமாதான சூழ்நிலை பிறப்பிக்கப்பட்டால் நாம் பேச்சுக்களுக்குத்

வந்தவர்கள் திரும்பிவிட்டார்கள் அவர்கள் எதையுமே புதிதாகக் கொண்டு வரவில்லை; எதையுமேபுதிதாகக்கொண்டு செல்லவுமில்லை. தமிழ்மக்கள் சமாதானத்தைவிரும்புகிறார்கள்; புலிகளும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். இந்தப் பழைய செய்தியைத் தான் கொண்டு சென்றிருக்கிறார்கள் இதைத் தான் கொழும்பிலும் சொல்லப் போகிறார்கள். கொழும்பிலும் புதிதாக எவ்வித திருப்பமும் ஏற்படப் போவதில்லை.

போரை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் விரும்பவில்லை; பொருளாதார நெருக்குதலைத் தளர்த்தவும் விரும்பவில்லை- போரையும் பொருளாதார நெருக்குதலையும் அரசியல் அழுத்தமாகவே அரசு கணிக்கிறது. இந்த அழுத்தங்களோடு பேச்சு என்ற பொறியை வைக்க அரசு விரும்புகிறது. புலிகள் எந்த அளவிற்கு விட்டுக்கொடுப்பார்கள். எந்த அளவிற்கு இறங்கி வருவார்கள் என்பதை நாடிபிடித்துப் பார்ப்பதே அரசாங்கத்தின் நோக்கம். இந்த நோக்கில் தான் சமாதானத் தூதுகளையும் அரசாங்கம் ஊக்குவிப்பதுபோலத் தெரிகிறது.

இனிவருவது தேர்தல் யுகம். இந்தக காலகட்டத்தில் கவனமாகக் காய்களை நகர்த்த வேண்டும் என்பது, ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கு நன்கு தெரியும். இந்தக் காலத்தில்' சிங்கள பேரினவாதத்திற்குத் தீனி போடுவதையே அரசியல்வாதிகள் விரும்புவார்கள். தமிழர்களுக்குநீதிவழங்குவது என்பது அரசியற் தற்கொலையாக முடியும். எனவே, இந்தக் கட்டத்தில் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி, தமிழர் பிரச்சினையைத் தீர்க்க உருப்படியான தீர்வுத் திட்டம் ஒன்றை முன் வைப்பது. அரசாங்கத்தின் நோக்கமல்ல.

போருக்கு ஓய்வு கொடுப்பதை அரசு விரும்பாததற்குப் பல காரணங்கள் உண்டு- இராணுவம் இன்னும் மேலாதிக்க நிலையை எட்டிவிடவில்லை. தோல்விக்கு மேல் தோல்வியைச் சந்தித்து படையினரின் மனவுறுதி தளர்ந்திருக்கிறது- இன்றைய

படைகளுக்கு ஏற்பட்டு வரும் பேரிழப்புகள் காரணமாக, யுத்தத்திற்கு எதிரான குரல் ஒன்றும் தென்னிலங்கையில் எழுகிறது- இது பாமர மக்கள் மட்டத்திலிருந்து எழும் அங்கலாய்ப்பு; பணத்திற்காக பிள்ளைகளைஇராணுவத்திற்கு அனுப்பி, பிணத்தைக்கூடப் பார்க்க முடியாத பெற்றோரின் அவலக் குரல்- இது மெல்ல மெல்லப் பலம் பெற்று வருகிறது- அத்துடன் உதவி வழங்கும் உலக நாடுகளும் ஓரளவு அழுத்தம் போடுகின்றன. புலிகளை வெல்ல முடியாதஒரு போரில் பெருந்தொகைப் பணம் விரயமாகிறது- யுத்தமும் முடிவில்லாத கதையாகத் தொடர்கிறது- அரசின் வலுவுக்கு இது அச்சுறுத்தலாக அமைகிறது- இலங்கையில் பெருமளவு முதலீடு செய்வதற்கோ, அன்றி இத்தீவை உலக முதலாளியத்தின் ஒரு வர்த்தக வலயமாக மாற்றுவதற்கோ முடியாமல் தொடரும் இப்போர் ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது- இதனால் சமாதான வழியில பிரச்சினையைத் தீர்க்க முயலுமாறு மேற்குலகம் சிறிலங்காவுக்கு அழுத்தம் போடுகிறது போருக்கு எதிராக எழும் இந்த ஆட்சேபக் குரல்களைத் திருப்திப்படுத்துவதற்காக சமாதானப் பேச்சில் அக்கறை காட்டுவது போலஅரசாங்கம் நடிக்கிறது. சமாதானப் பேச்சுக்கு அரசு தயாராக இருக்கிறது- ஆனால் புலிகள் பேச்சை விரும்பவில்லை என்ற பொய்ப் பிரசாரத்தையும் மேற்கொண்டு வருகிறது. எந்தச் சூழ்நிலையிலும் தலைவர் பிரபாகரன் கொழும்பிற்கு வரமாட்டார் என்பதை நன்கு தெரிந்திருந்தும், அவர் கொழும்பு வந்து தன்னுடன் பேசலாம் என ஜனாதிபதி அழைப்பு விடுவதும் 'அழைத்தாலும் அவர் வருகிறார் இல்லையே'' எனப் பின்பு புலம்புவதும், விஷமத்தனமான பிரசாரமன்றி வேறொன்றுமல்ல.

உலகத்திடமிருந்து கடன் வாங்கும் பருவகாலம் நெருங்கிவிட்டது. இந்தப் பருவகாலத்தில் சமாதான தூதுக்களை ஊக்குவிப்பதும். சமாதானத்திற்கான பொய்ச் சமிக்ஞைகளைக் காட்டுவதும், வருடாவருடம் சிறிலங்கா அரசு மேடையேற்றும் அரசியல் நாடகமாகும்- புளித்துப் போன இந்த நாடகத்தை, மேற்குலகத் தனவந்தர்கள் சலிப்புறாமல் ரசித்துக் கொண்டிருப்பதுதான் எமக்கு வியப்பாக இருக்கிறது.

நன்றி

**விடுதலைப் புலிகள்**

... மன்றம் யாழ்ப்பாணம்

## நால்வருக்கு குருநிலைப்பட்டம்

(நல்லூர்)

மார்ச் 2ஆம் திகதி புதன் கிழமை யாழ். பேராலயத்தில் நான்கு அருட்சகோதரர்கள் யாழ் ஆயர் பேரருட் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட உள்ளார்கள்.

நாரந்தனையைச் சேர்ந்த அருட்சகோதரர் க. அருள்நேசன், மண்டைதீவைச் சேர்ந்த அருட்சகோதரர் அ.ப. அன்ரனிப்பிள்ளை, சில்லாலையைச் சேர்ந்த அருட்சகோதரர் யோகி போல் றொகான், அச்சுவேலியைச் சேர்ந்த அருட்சகோதரர் அல்பேட் ஜோசப் அருள்ராஜ் ஆகியோர்களே குருக்களாக திருநிலைப்படுத்தப்பட உள்ள அருட்சகோதரர்களாவார்கள். (17)

## துணைவேந்தர் துரைராஜா சேவைநலம் பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவின் சேவையைப் பாராட்டி யாழ் பல்கலைக்கழக விளையாட்டுக் குழுவினால் நடாத்தப்பட்ட விழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

பான்ட் வாத்திய குழுவினரின் இசையுடன் பவனியாக அழைத்துவரப்பட்டு அவரின் பல்கலைக்கழக சேவையைப் பாராட்டி, யாழ் சோட்டோகான் கராத்தே நெறிப்படுத்துனர் எஸ். தர்மராசாவினால் பதக்கமும், விருதும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து யாழ்பல்கலைக்கழகமாணவர்கள், பருத்தித்துறை கராத்தே மற்றும் யாழ் சோட்டோகான் குழுவினரின் கராத்தே, நிஞ்சா, சிலம்பு, மற்றும் ரிஸ்லிங் "கண்காட்சிகளும்" நடாத்தப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

மேலும் யாழ் பல்கலைக்கழக விளையாட்டு சபையின் சார்பில் திரு. நடராஜசுந்தரம் அவர்களால் "ஒலிம்பிக் விருதும்" வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இவ்வைபவத்தில் யாழ் பல்கலைக்கழக விளையாட்டுப் பணிப்பாளர் திரு. தியாகராஜா, திரு. நடராஜசுந்தரம், மற்றும்துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவும் உரையாற்றினர்.

இவ் விழா வைபவத்திற்கு பல்கலைக்கழக விளையாட்டு அணித்தலைவர் எஸ் ஈ. கென்றிசன் தலைமை தாங்கி நடாத்திவைத்தார். இவ் வைபவத்திற்கு பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு பல்கலைக்கழக துணைவேந்தரின் சேவையைப்பாராட்டி மகிழ்வித்தனர். (50)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ முகாம்கள் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரும், விசேட அதிரடிப் படையினரும் மேலும் பல புதிய முகாம்களை அமைத்துள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி மட்டும் ஒன்றுக்கு மேற்பட்ட முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. நீலாவணை, நாவலடி, புன்னைக்குளம், கோட்டைமேட்டுத்துறை, 38ஆம் கிராமப் பாடசாலை ஆகிய இடங்களில் விசேட அதிரடிப்படையினரும், பாவற்கொடிச்சேனை தவராசா கடையடி, த்தீம், ஆறாம்கட்டை, பளுகாமம், பாவற்குடா பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களில் இராணுவத்தினரும் மேற்படி தினத்தில் புதிய முகாம்களை அமைத்துள்ளனர்.

## பண்பாட்டு கருத்தரங்கு

(குருநகர்)

யாழ் பிரதான வீதி, திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் 28ஆம் திகதி திங்கள் மாலை 4.30மணிக்கு பண்பாட்டுக் கருத்தரங்கம் நடைபெறும்.

"கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்களில் தமிழர் பண்பாட்டு மயமாக்கல்" என்னும்தலைப்பில் திரு. எஸ். தங்கராசா பி. ஏ. பண்பாட்டுரையை வழங்குவார். (21)

மன்னாரில் கைதான

## தபால் ஊழியர் பற்றி தகவல் ஏதும் இல்லை

(மன்னார்)

மன்னார் பகுதியில் சென்ற வருடம் கைது செய்யப்பட்ட மன்னார் தபாலக ஊழியர் இன்னமும் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதை அறிய முடியாத நிலை இருப்பதாக அவரது உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சென்ற வருடத்தில் இந்த ஊழியர் தனது வீட்டுப்பாவனைக்காக விறகு எடுக்கச் சென்ற போது படையினரால் கைது செய்யப்பட்டார் என்றும், கைது செய்யப்படும் போது அவரிடம் முப்பதாயிரம் ரூபா பணம் இருந்தது என்றும் மேலும் தெரியவருகின்றது.

இவரைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் இவரது உறவினர்கள் தீவிர முயற்சிகளைமேற்கொண்டபோதும், இதுவரை ஒரு தெளிவான பதிலும் கிடைக்கவில்லை எனவும் அவ்வட்டாரங்கள்மேலும்கவலை தெரிவித்துள்ளன. (நி)

பேராதனை பல்கலைக்கழக

## துணைவேந்தர் இல்லம் மாணவரால் முற்றுகை

(கொழும்பு)

பேராதெனிய பல்கலைக்கழக மாணவர்களின் விடுதி வசதி கோரி எழுபது நாள் போராட்டம் தற்போது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

இதன் உச்சக்கட்டமாக துணைவேந்தர் இல்லம் மாணவர்களினால் ஐந்து நாட்கள் முற்றுகை இடப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

பல்கலைக்கழக மாணவர்களின் விடுதி வசதிகளை நூற்றுக்கு நூறு வீதம் வழங்க முடியாது என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி பண்டிதரட்ண தெரிவித்துள்ளார்.

பேராதெனிய பல்கலைக்கழக மாணவர்களின் விடுதி வசதி தொடர்பாக எழுபது சதவீதமான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளதாகவும் எனவே நூற்றுக்கு நூறுவீதம் உலகில் எப்பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை என்றும் எனவே அதனை தீர்ப்பது என்பது சாத்தியப்படாது எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே தற்போது பல்கலைக்கழக மாணவர்களினால் துணைவேந்தர் இல்லம் முற்றுகையிடப்பட்டுள்ளதாகவும் எனவே மாணவர்கள் முற்றுகையை கைவிட்டு தமது விரிவுரைகளுக்கு செல்லத்தவறின் அடுத்தவாரம் பல்கலைக்கழகம் மூடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக் கழகம்

## வெளிவாரிப் பரீட்சை மாற்றங்கள் ஏதுமில்லை

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி மாணவர் பரீட்சைகள் தொடர்ந்தும் ஏப்பிரல், மே மாதங்களில் நடைபெறுமென்றும், இதில் மாற்றங்கள் இருக்க மாட்டாது என்றும் பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இதன்படி கலை முதல் தேர்வு பரீட்சை ஆகஸ்ட் மாதத்திலும், கலை இறுதி யாண்டு பரீட்சை ஏப்பிரல் மாதத்திலும் நடைபெற இருக்கிறது. சென்ற ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற கலை முதல் தேர்வு பெறுபேறுகள் ஏப்பிரல் மாத இறுதியில் வெளிவரும் என எண்ணுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## வானியலும் சோதிடமும்; கற்கைநெறி இன்று ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் வானியலும், சோதிடக்கலையும் பற்றிய ஓர் அடிப்படைக் கற்கைநெறி தொகுதி ஒன்றின் ஆரம்ப விழா இன்று பிற்பகல் 2மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. சனி, ஞாயிறு தினங்களில் தொடர்ந்து ஏழு வாரங்கள் இடம்பெறவுள்ள இக் கற்கை நெறி, மொத்தம் 63 மணித்தியாலங்களை உள்ளடக்கியதாகும்.

புறநிலைப்படிப்புகள் அலகு இணைப்பாளர் திரு. இரா. சிவச்சந்திரன் தலைமையின் கீழ் இடம்பெறவுள்ள மேற்படி கற்கைநெறியின் ஆரம்ப விழாவில் ஆரம்ப உரையை கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்துவார். பேராசிரியர் வி. சிவசாமி, கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர், திரு. எம். வேதநாதன், திரு. பொ. செல்லத்துரை ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

## கணித விஞ்ஞான மூலவள நிலையம்

(மல்லாகம்)

கணித விஞ்ஞான மூலவள நிலையமொன்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் எதிர்வரும் திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. காலை 8.00 மணிக்கு கல்லூரி அதிபர் திரு. நா. கந்தசாமி தலைமையில் நடைபெறும் இத் திறப்பு விழாவில் விஞ்ஞான கல்வி அதிகாரி திருமதி வேதநாயகம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (09)

கிழக்கில் காணாமற் போனவர்களில்

## 11மாத குழந்தை உட்பட 68 சிறுவர் அடங்குவர்

இலங்கையின்கிழக்குப்பகுதியில் காணாமற்போன தமிழர்களில் 68 பிள்ளைகளும் அடங்குவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

படையினரின் நடவடிக்கையினால் காணாமற்போன இந்த பிள்ளைகளில் 11 மாதக் குழந்தை ஒன்றும் இரண்டு வயதுக் குழந்தைகள் இரண்டும் அடங்குவர். 1990செப்டம்பரில் கிழக்கில் காணாமற் போனோர் பட்டியலில் இருந்துஇவ்விபரம் தெரியவந்துள்ளது. நான்கு கிராமங்களில் இருந்து இவர்கள் காணாமற் போயினர் என சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கை கூறுகின்றது.

## கப்பலில் உறங்கும் குடாநாட்டுத் தபால்கள்

(வடமராட்சி)

கப்பல்மூலம் எடுத்துவரப்பட்ட தபால்பொதிகள் இன்னமும் கப்பலிலேயே உறங்கிக்கொண்டிருக்கின்றன. கப்பலில் உறங்கும் கடிதங்கள் இன்று தரையிறங்குமா? என்று குடாநாட்டுமக்கள் பலர் அங்கலாய்க்கின்றனர்.

யாழ். குடாவுக்கான தபால் பொதிகள் 'கோமாரி' கப்பலில்எடுத்துவரப்பட்டும் ஐந்து தினங்களாக இறக்கப்படாத நிலையில் உள்ளன.

கடந்த 21ஆம் திகதி பருத்தித்துறைக்கு இக்கப்பல் வந்த போதிலும் இத் தபால்பொதிகளை இறக்குவதற்கான ஏற்பாடுகளை தபால் திணைக்கள அதிகாரிகள் இதுவரை எடுத்துக்கொள்ளாததினால் மக்கள் விசனமடைகின்றனர்.

இன்று பருத்தித்துறைக்கு விறகு இறக்குவதற்காக காங்கேசன்துறையில் தரித்து நிற்குமெனவும் அறிய முடிகிறது.

இன்று இக்கப்பல் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வரும் போது தபால் பொதிகளை இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை உறுதியாகக் கூற முடியவில்லை. (யோ)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 25-2-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 997

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9487, 27-9030, 26-8746, 26-3812, 24-6316, 28-5484, 24-4367, 28-4545, 28-6027, 24-3436, 41-9530, 42-1464, 24-5703, 28-3429, 26-4648, 24-5416, 26-0852, 24-6480, 24-5140, [illegible]

## சமஷ்டி முறையை உருவாக்க முயற்சிகள் நடக்கின்றனவா?

### தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றத்தில் கேள்வி

இந்தியாவைப் போன்று இங்கும் சமஷ்டி முறையை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என மக்கள் ஐக்கிய முன்னணியின் எம். பி. தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் அங்கு தமதுரையின் ... யர் நிக்கலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ, ஆயர் கென்னத் பெர்னாண்டோ, சர்வோதயத் தலைவர் ஆரியரட்ன ஆகியோர் சென்று வந்தனர். அவர்கள் பிரதமரைச் சந்தித்து நிலைமைகளை விளக்கியதாகவும், அவர்களை மத்தியஸ்தராகக் கொண்டு பேச்சுக்கள் நடைபெறுவதா... பிடிக்க முடியவில்லை.

இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்படும் விதம் குறித்து மக்கள் வெறுப்புக் கொண்டுள்ளனர். நீதித்துறை அவமானப்படுத்தப்படுகின்றது.

குற்றத்தில் ஈடுபடும் ஐ. தே க. ஆதரவாளர்கள் சட்...

## ஒன்று கூடல்

பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி மாணவர் ஒன்றியத்தின் 16-வது ஒன்றுகூடல் வைபவம் இன்று காலை 9-00 மணிக்கு பட்டப்படிப்புகள் கல்லூரிமண்டபத்தில் ஒன்றிய...

யில் காணாமற்போன தமிழர்களில் 68 பிள்ளைகளும் அடங்குவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

படையினரின் நடவடிக்கையினால் காணாமற்போன இந்த பிள்ளைகளில் 11 மாதக் குழந்தை ஒன்றும் இரண்டு

டும் அடங்குவர். 1990 செப்டம்பரில் கிழக்கில் காணா மற்போனோர். பட்டியலில் இருந்து இவ்விபரம் தெரியவந்துள்ளது. நான்கு கிராமங்களில் இருந்து இவர்கள் காணாமற்போயினர் என சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கை கூறுகின்றது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 25-2-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 997

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9487, 27-9030, 26-8746, 26-3812, 24-6316, 28-5484, 24-4367, 28-4545, 28-6027, 24-3436, 41-9530, 42-1464, 24-5703, 28-3429, 26-4648, 24-5416, 26-0852, 24-6489, 24-5140, 26-7187, 28-4817.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-5036, 26-2317, 26-2366, 41-2979, 24-3063, 24-6652, 26-7286, 26-6309, 42-9326, 24-9755, 42-1059, 26-8936, 26-4885, 43-4045, 27-9779, 26-3893, 27-7627, 41-9663, 42-3267, 41-6784, 26-1253, 28-2156.


## நிகழ்ச்சி பிற்போடப்பட்டுள்ளது

யாழ்/சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் தென்மராட்சிக் கோட்ட மகளிர் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் நடாத்தவிருந்த "மாபெரும் கலைவிழா" (27-02-1994) தற்பொழுது பிற்போடப்பட்டு பின்னர் 24-03-1994 அன்று நடைபெறவுள்ளது என்பதை அனைத்து ரசிகப் பெருமக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

நிகழ்ச்சி:- தமிழீழ இசைக்குழுவின் இசைத் தென்றல், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு (நாட்டிய நாடகம்), மண்ணில் மைந்தர்கள் (நாடகம்)

நன்றி

**மகளிர் கலை பண்பாட்டுக் கழகம்**

நடுவப் பணியகம்,

தமிழீழம். (7615)

யாழ்.

மிட் ரவுண் றோட்ரறக்ற் கழகம்

நடாத்தும்

## கோலக் கண்காட்சி

அத்துடன் கைப்பணிப் பொருட்களின் விற்பனையும் நடைபெறும்.

**இடம்:** யாழ். இந்து மகளிர் கல்லூரி

**காலம்:** 25, 26, 27 - 2 - 1994

காலை 9 - 00 மணி தொடக்கம்

மாலை 5 - 00 மணி வரை

(7619)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


தியாலங்களை உள்ளடக்கியதாகும்.

யோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

சாரி திருமதி வேதநாயகம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (09)

# சமஷ்டி முறையை உருவாக்க முயற்சிகள் நடக்கின்றனவா?

## தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றத்தில் கேள்வி

இந்தியாவைப் போன்று இங்கும் சமஷ்டி முறையை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என மக்கள் ஐக்கிய முன்னணியின் எம். பி. தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் அங்கு தமதுரையின் போது, மாகாண சபைகளுக்கு, நிலம், பொலிஸ் விவகாரங்களுக்காக அதிகாரங்களை இந்திய அரசியல் அமைப்பில் உள்ளதுபோன்று, வழங்கப்பட உள்ளதாக பேசப்படுகின்றது. இது தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன?

வடக்கு-கிழக்கிற்கு பேராயர் நிக்கலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ, ஆயர் கென்னத் பெர்னாண்டோ, சர்வோதயத் தலைவர் ஆரியரட்ன ஆகியோர் சென்று வந்தனர். அவர்கள் பிரதமரைச் சந்தித்து நிலைமைகளை விளக்கியதாகவும், அவர்களை மத்தியஸ்தராகக் கொண்டு பேச்சுக்கள் நடைபெறுவதாகவும், செய்திகள் வந்துள்ளன.

இது தொடர்பாக பிரதமர் இச்சபைக்கு அறிவிக்க வேண்டும்.

வடக்கு-கிழக்கு பிரச்சினையைத் தீர்க்க, புலிகளை அடக்க மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. ஆனா புலிகளின் வாலைத்தானும் பிடிக்கமுடியவில்லை.

இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்படும் விதம் குறித்து மக்கள் வெறுப்புக் கொண்டுள்ளனர். நீதித்துறை அவமானப்படுத்தப்படுகின்றது.

குற்றத்தில் ஈடுபடும் ஐ. தே. க. ஆதரவாளர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதில்லை.

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதாயின் இச்சபையின் அங்கீகாரத்தைப் பெற்று-முழு நாட்டு மக்களுக்கும் இசைவான முறையில் தீர்வு காண வேண்டும். அதைவிட்டு அரசியல் விளையாட்டை நடத்த வேண்டாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# மாற்றுக்கட்சி பிரசாரத்துக்கு தவறுதலாக சென்ற அபேட்சகர்

(கொழும்பு)

தென் மாகாண சபையின் பொது ஜன மக்கள்முன்னணி தேர்தல் கூட்டமொன்றிற்கு ஐக்கிய தேசியக் கட்சி தென் மாகாணசபையில் போட்டியிடும் அபேட்சகர் கலந்துகொண்டமை தவறுதலாக ஏற்பட்ட சம்பவம் என அவ் அபேட்சகர் தெரிவித்துள்ளார்.

தென் மாகாண சபையில் கடந்த 23ஆம் திகதி நடைபெற்ற பொதுஜன மக்கள் முன்னணியின் பிரசார கூட்டம் நடைபெறும்போது தான் அவ்வழியாக சென்றதாகவும் அதனை அவர்கள் தான் அக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வந்ததாக ஒருபொய்யான பிரசாரம் செய்தார்கள் எனவும் ஐ. தே. க. வேட்பாளர் மாபொலகம விமலரட்ண தெரிவித்தார்.

## இராணுவ

மேலும் புளொட் குழுவினர் தும்பங்கேணி என்ற இடத்துக்குச்சென்று அங்கு குமார்என்பவரது உழவுஇயந்திரத்தைப் பறித்துச்சென்று சேதமடையச்செய்துள்ளனர். அத்துடன் இவரது மற்றைய உழவு இயந்திரத்தை தரும்படியும் அல்லது 2 இலட்சம் ரூபா தரும்படியும் அவரை மிரட்டியுள்ளனர்.

## கிட்டப்பார்வை

கோளாறு நீங்குகிறது என தெரிவிக்கப்படுகிறது. 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே இத்தகைய சிகிச்சை செய்யப்படுகிறது. இச் சிகிச்சை கணிப்பொறியின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகிறது. இச் சிகிச்சையின் போது வலி எடுக்காது.

## கிழக்கில்

னர். கிழக்குத் தமிழர்களை வடக்கு வாழ் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுடன் வேறுபட்டவர்கள் என்பதைக் காட்டவும் அதன் பின் வடக்கைத் தனிமைப்படுத்தி வடக்கு மக்கள் மீது பாரிய யுத்தத்தை கட்டவிழ்த்துவிட அங்கீகாரம் பெறுவதற்கு இத் தேர்தலை அரசு நடத்துவதற்கான நோக்கமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 263 தேர்தல் சாவடிகள் இருக்க வேண்டும். ஆனால் தற்போது 160 சாவடிகளையே அரசு அமைத்துள்ளது. அவர்களால் எஞ்சிய பகுதிகளில் சாவடிகளை அமைக்க முடியாத நிலைமை காணப்படுகிறது தேர்தல் வாக்களிப்பின் பின் சுமார் 9 பகுதிகளில் இருந்து ஹெலிகப்டர் மூலமே வாக்குப்பெட்டிகளை எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது. இதுவெல்லாம் இங்கு ஜனநாயக தேர்தல் நடைபெறவில்லை என்பதைக்காட்டுகிறது.

இப்பகுதிகள் இப்போது அரச அதிபர் கட்டுப் பாட்டிலும் இல்லை. இராணுவ இணைப்பதிகாரி ஒருவரே நிர்வாகம் செய்கிறார். மட்டக்களப்பு மாநகரசபையின் கட்டடத்தை இராணுவமே பயன்படுத்துகிறது. இதே போலவே ஏனைய 11 பிரதேச சபைகளிலும் நிலைமை என அவர் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் மேலும் குறிப்பிட்டார்.

## பிரிவுபசாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அ. துரைராஜாவிற்கு மார்ச்மாதம் 26 ஆம் திகதி சேவைநலம் பாராட்டு விழாவும் பிரிவு உபசார நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற இருக்கும் இவ் வைபவத்தில் பல்கலைக்கழக ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

கப்பல்மூலம் எடுத்துவரப்பட்ட தபால்பொதிகள் இன்னமும் கப்பலிலேயே உறங்கிக்கொண்டிருக்கின்றன. கப்பலில் உறங்கும் கடிதங்கள் இன்று தரையிறங்குமா? என்று குடா நாட்டுமக்கள் பலர் அங்கலாய்க்கின்றனர்.

யாழ். குடாவுக்கான தபால் பொதிகள் 'கோமாரி' கப்பலில் எடுத்துவரப்பட்டும் ஐந்து தினங்களாக இறக்கப்படாத நிலையில் உள்ளன.

கடந்த 21ஆம் திகதி பருத்தித்துறைக்கு இக்கப்பல் வந்தபோதிலும் இத் தபால்பொதிகளை இறக்குவதற்கான ஏற்பாடுகளை தபால் திணைக்கள அதிகாரிகள் இதுவரை எடுத்துக்கொள்ளாததினால் மக்கள் விசனமடைகின்றனர்.

இன்று பருத்தித்துறைக்கு மேற்குறித்த கப்பல் வந்த போதிலும் தபால் பொதிகள் இறக்குவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம்செலுத்தவில்லை. எதிர்வரும் 28ஆம் திகதிவரை இக் கப்பல் தொடர்ந்து வருமெனவும் பின்னா

கேசன்துறையில் தரித்து நிற்குமெனவும் அறிய முடிகிறது.

இன்று இக்கப்பல் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வரும் போது தபால் பொதிகளை இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை உறுதியாகக் கூற முடியவில்லை. (யோ)

## ஒன்று கூடல்

பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி மாணவர் ஒன்றியத்தின் 16-வது ஒன்றுகூடல் வைபவம் இன்று காலை 9-00 மணிக்கு பட்டப்படிப்புகள் கல்லூரிமண்டபத்தில் ஒன்றிய தலைவர் திரு சி. இளங்கோ தலைமையில் நடைபெறவுள்ளது பிரதம விருந்தினராக பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் கலந்துகொள்கின்றார்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி வைரமுத்து செல்லமுத்து

உடுவில் வீதி, மானிப்பாயைச் சேர்ந்த மருதர் வைரமுத்துவின் (J. P) பாரியார் திருமதி செல்லமுத்து காலமாகிவிட்டார் இவரது ஈமக்கிரியைகள் இன்று நண்பகல் 11. 30 மணியளவில் 17/2 புகையிரத நிலைய வீதி, சுண்டுக்குளியில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

வை. சந்திரராஜ் (மகன்)

(கிராம சேவையாளர்)

(7620) ஆனைக்கோட்டை

### திரு. கதிர்காமு குமாரசாமி

(இளைப்பாறிய 1-ம் தர படவரைஞர், நில அளவைத் திணைக்களம்)

மாதனை பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. கதிர்காமு தம்பதிகளின் புதல்வன் குமாரசாமி அவர்கள் 25-02-1994 அன்று வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் திருமதி பாலாம்பிகை (ஆசிரியர் காட்லிக் கல்லூரி பருத்தித்துறை) அவர்களின் அன்புக் கணவரும், திரு. சுரேந்திரராசா (காட்லிக் கல்லூரி மாணவன்) வின் அன்புத் தந்தையும், திரு. வயிரமுத்து, திருமதி சகுந்தலை ஆகியோரின் சகோதரரும் பண்டிதர் திரு கு. க. சிங்காரவேலு, திரு. இரத்தினவேலு, திரு. மா. பாலசுப்பிரமணியம் பாலாமணி ஆகியோரின் மைத்துனரும், செல்வி க. சுதமதி, க. கேதீஸ்வரன், விக்கினராசா, கணேசராசா, அருள்மொழி ஆகியோரின் சிறிய தந்தையும், தவச்செல்வி, வானதி, சொரூபன் ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 26-02-94 இன்று சனி பிற்பகல் 2-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:

மாதனை, பருத்தித்துறை. திருமதி பாலாம்பிகை குமாரசாமி

(7617)